பக்கங்கள் 16

விலை ரூ. 50

புதன் பொய்கை

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38
கதிர் : 165

புதன்கிழமை 10 மே 2023

சித்திரை 27 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## வடக்கு சுகாதாரப் பணிப்பாளர் பதவியை இழந்தார் லியனகே!

யாழ்ப்பாணம், மே 10
வடமாகாண சுகாதாரப் பணிப்பாளராகப் பதவி வகித்த மருத்துவர் திலீப் லியனகேயிட »15

முள்ளிவாய்க்கால் கஞ்சிப் பகிர்வு

## ஒளிப்படங்களை எடுத்து இராணுவம் அச்சுறுத்தல்



யாழ்ப்பாணம், மே 10
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தால் வடக்கு – கிழக்கு தழுவிய ரீதியில் முன்னெ டுக்கப்பட்டுவரும் »15

தமிழர் தாயகத்தில்

# தொல். திணைக்களத்தால் 37 இடங்கள் ஆக்கிரமிப்பு!

சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, மே 10
தமிழர் தாயகத்தில் தொல்பொருள் திணைக்களத்தால் 37 இடங்களில் பௌத்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் தீவிரம் பெற்றுள்ளன. இந்த சிங்கள – பௌத்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைக் கைவிட்டு, தமிழர்கள் சுயத்தோடு வாழ்வதற்கான சூழல் உருவாக்கப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப் பினர் சி.சிறீதரன் வலியுறுத்தினார். »15

## ஜனாதிபதியுடன் பேசிய விடயங்கள் இந்தியத் தூதுவருக்கு எடுத்துரைப்பு



பேச்சு முடிந்தவுடன் சூட்டோடு சூடாக
இந்தியத் தூதரகத்துக்கு நேரே சென்ற சம்பந்தன்

கொழும்பு, மே 10
ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்கவுடன் நடத்திய பேச்சுக்கள் தொடர் பான முழு விவரங்களையும் இந்தியத் தூதுவர் கோபால்பாக்லேவுக்கு எடுத்துரைத் »15

## கிழக்கு மாகாண எம்.பி.க்களையும் பேச்சுக்கு அழைக்கின்றார் ரணில்



கொழும்பு, மே 10
அதிகாரப் பகிர்வு தொடர்பிலான பேச்சுக்கு கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைப்பதில் தனக்கு எந்தவொரு ஆட்சேபமும் இல்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்துள்ளார். அத்துடன் கிழக்கு அபிவிருத்தி தொடர்பான விட யங்கள் தயார்படுத்தப்படாமையால் »15







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாணவர்களைக் கடத்த முயற்சி பாடசாலைகளுக்குப் பாதுகாப்பு

**மன்னார், மே 10**
**மன்னாரில் மாணவர்களை இலக்கு வைத்து கடத்தல் முயற்சிகள் இடம்பெறுவதால் மன்னாரிலுள்ள பாடசாலைகளுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.**



கடந்த சனிக்கிழமை மற்றும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மக்கள் நடமாட்டம் குறைந்த பாதை வழியாகச் பயணித்த இரு மாணவர்களுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கி, அவர்களைக் கடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்று பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தெரிவித்திருந்தனர்.
இது தொடர்பாக மன்னார் மாவட்டச்செயலர், வலயக்கல்விப் பணிப்பாளர், மன்னார் பொலிஸார், இராணுவத்தினர் ஆகியோர் கலந்துரையாடிய பின்னர், நேற்றுச் செவ்வாய்க்கிழமை முதல் மன்னாரில் உள்ள பாடசாலைகளுக்கு விசேட இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. பொலிஸாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இருப்பினும் அதிகளவான பெற்றோரும் பிள்ளைகளுடன் பாடசாலைக்குச்செல்வதுடன், மாணவர்கள் குழுக்களாகவே வீதிகளில் பயணிக்கின்றனர்.
மாணவர் கடத்தல் முயற்சி தொடர்பில் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில், கடத்தல் கும்பல் மற்றும் வாகனம் தொடர்பாக மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-14,26)

# கடன் மறுசீரமைப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாது!

*மத்திய வங்கி உத்தரவாதம்*

கொழும்பு, மே 10
**உள்ளகக் கடன் மறுசீரமைப்புச் செயன்முறையின்போது வங்கித்துறையின் உறுதிப்பாட்டுக்கு அச்சுறுத்தல் ஏற்படாது என்று மத்திய வங்கி உத்தரவாதமளித்திருப்பது பெரிதும் ஆறுதலளிக்கின்றது என்று இலங்கையிலுள்ள வங்கிகளின் கூட்டிணைவு தெரிவித்துள்ளது.**
சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டுக்கு அமைவாக உள்ளகக் கடன்மறுசீரமைப்பை மேற்கொள்ளும்போது உள்நாட்டு வங்கி மற்றும் நிதியியல் கட்டமைப்புக்களின் செயற்பாடுகள் பாதிக்கப்படும் என்று பல்வேறு தரப்பினராலும் கருத்துக்கள் வெளியிடப்பட்டு வரும் பின்னணியிலேயே இலங்கையிலுள்ள வங்கிகளின் கூட்டிணைவு அறிக்கை ஒன்றை வெளியிட்டு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.
அறிக்கையில் மேலும் உள்ளதாவது:
உள்ளகக் கடன் மறுசீரமைப்புக் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் முன்னெடுக்கப்படும் பேச்சுக்களின்போது வங்கித்துறையின் உறுதிப்பாடு அச்சுறுத்தலுக்குள் தள்ளப்படாது என்று வங்கித்துறையை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் பொருந்திய கட்டமைப்பான மத்திய வங்கி உத்தரவாதமளித்திருப்பது எமக்குப் பெரிதும் ஆறுதலளிக்கின்றது.
கடன் மறுசீரமைப்பை மேற்கொண்டதன் பின்னர் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கக்கூடிய வகையில் போதியளவிலான நிதியையும் திரவத்தன்மையையும் வங்கிகள் பேணவேண்டியது அவசியமாகும். அதனுடன் இணைந்ததாக கையிருப்பின் அளவு மற்றும் வரவு- செலவுத்திட்டப் பற்றாக்குறை ஆகியவற்றை சாதகமான மட்டத்துக்குக் கொண்டு வருவதற்கு ஏதுவான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவேண்டும்.
கையிருப்பு மற்றும் நிதியியல் மறுசீரமைப்புக்கள் தாமதமடையும் பட்சத்தில் பொருளாதாரமும் வங்கிக்கட்டமைப்பும் முகங்கொடுக்கக்கூடிய சவால்கள் மிக முக்கியமானவையாகும். இவ்வாறானதொரு பின்னணியில் மத்திய வங்கியால் வழங்கப்பட்டுள்ள உத்தரவாதத்தை அடிப்படையாகக் கொண்டு நாம் திருப்தியடைகின்றோம்- என்றுள்ளது. (எ-14,இ)

# கட்சிக்குக் கட்டுப்படாத பௌசி உறுப்புரிமை இடைநிறுத்தம்!

கொழும்பு, மே 10
**நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசியின் கட்சி உறுப்புரிமையை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இடைநிறுத்தியுள்ளது.**
கட்சியின் முடிவுக்குக் கட்டுப்படாமல் நாடாளுமன்றத்தில் வாக்களித்தமையாலேயே அவருக்கு எதிராக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு கூடியபோது, நாடாளுமன்ற உறுப்பினர் பௌசியின் கட்சி உறுப்புரிமையை இடைநிறுத்தவும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை, கட்சிச் செயற்குழுவின் தீர்மானங்களுக்கு எதிராகச் செயற்படும் உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கப்பட்டுள்ளது. (எ-14,44)



# மே 9 சம்பவங்களை விசாரிக்க விசாரணைக் குழு நியமிக்குக!


*அமைச்சர்கள் கோரிக்கை*

கொழும்பு, மே 10
நாட்டில் கடந்த ஆண்டு மே 9 இல் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமித்து நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாக்கவேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அமைச்சர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
வாராந்த அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த வன்முறை இடம்பெற்று ஓராண்டு நிறைவடைந்துள்ளது. கடந்த ஆண்டு இதேநாளில் அரசமைப்பு, நிறைவேற்றதிகாரம், நீதிமன்றம் ஆகிய நாட்டின் ஜனநாயகத்துக்கு கரும்புள்ளி ஏற்படுத்தப்பட்டது. திட்டமிட்ட வகையில் நாட்டில் வன்முறைகள் இடம்பெற்றன.
இந்த வன்முறையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டமை, பல அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டமை தொடர்பில் நியாயம் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.
அத்துடன் இதுபோன்ற சம்பவங்கள் இனியொரு சந்தர்ப்பத்தில் பதிவாகாது இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் வன்முறைகள் தொடர்பில் விசாரிக்க வேண்டும். அதற்கு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமிக்க வேண்டும்.
மனித உரிமைகளை மீறும் வகையிலான செயற்பாடுகளுக்கு எதிரான முழுமையான அதிகாரம் கொண்டதாக இந்த விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாடு அமைய வேண்டும்- என்றார். (ச-இ)

## பல்கலை மாணவர் ஒன்றியத்தின்

# முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் வல்வையில் நேற்று ஆரம்பமானது

யாழ்ப்பாணம், மே 10
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகம் வல்வெட்டித்துறை, ஆலடிச் சந்தியில் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், நேற்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை உறவுகளுடன் பரிமாறி, இனவழிப்புக்கு உள்ளான வரலாற்றையும் வலிகளையும் இளைய தலைமுறையினருக்குக் கடத்தும் நோக்கில் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளது. அதன் ஆரம்ப நிகழ்வே வல்வெட்டித்துறையில் நேற்று இடம்பெற்றது.
இதில், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், சிவில் சமூகத்தினர், காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். பல்கலை ஒன்றியத்தின் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கும் நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி பொத்துவிலில் நிறைவடையும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கடன் மறுசீரமைப்பில் மக்களை ஏமாற்றுகிறது அரசு

## ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டு

**கொழும்பு, மே 10**

**தேசிய கடன் மறுசீரமைப்பு விடயத்தில் அரசாங்கம் ஒட்டுமொத்த மக்களையும் ஏமாற்றுகிறது. அரசாங்கம் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான சிறந்த திட்டங்களை சர்வதேச நாணய நிதியத்திடம் முன்வைக்கவில்லை. அரசாங்கத்தின் முறையற்ற இந்தச் செயற்பாடுகள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கு எடுத்துரைப்போம்.**

இவ்வாறு சுயாதீனமாகச் செயற்படும் சுதந்திர மக்கள் சபையின் ஆலோசகர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் ஏற்றுக் கொண்ட நிபந்தனைகளை செயற்படுத்தும்போது சமூகக் கட்டமைப்பு மிக மோசமாகப் பாதிக்கப்படும். நிபந்தனைகளின்படி அடுத்த 4 ஆண்டு காலப்பகுதியில் மாத்திரம் சகல சேவைகளுக்குமான வரி 119 சதவீதத்தால் அதிகரிக்கப்படும். இதனால் நடுத்தர மக்கள் திணறுவர்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான சிறந்த திட்டங்களை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் முன்வைக்கவில்லை. விதிக்கப்பட்ட நிபந்தனைகளை கண்மூடித்தனமாக ஏற்றுள்ளது.

தேசிய கடன் ஒருபோதும் மறுசீரமைக்கப்படாது என மத்திய வங்கியின் ஆளுநர், நிதியமைச்சின் இராஜாங்க அமைச்சர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்த விவகாரத்தில் அரசாங்கம் ஒட்டுமொத்த மக்களையும் ஏமாற்றுகிறது. ஊழல் மோசடி முடிவுக்குக் கொண்டு வரப்படவில்லை.

அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகள் தொடர்பில் எதிர்வரும் மாதம் நாட்டுக்கு வருகை தரவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளிடம் எடுத்துரைப்போம் - என்றார். (ச-இ)

# ஏமாற்றினார் ரணில் பெரமுன அதிருப்தி!

அமைச்சுப் பதவிகள் தரப்படும் என்று கூறி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏமாற்றி விட்டார் என்று மொட்டுக்கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

10 அமைச்சுப் பதவிகள் தரப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார். இன்று தருகின்றேன், நாளை தருகின்றேன் என்று பல மாதங்களாக ஜனாதிபதி இழுத்தடித்து ஏமாற்றி விட்டார்.

இதனால் அதிருப்தியும் ஆத்திரமுமே மிஞ்சியுள்ளது. இனி மேல் அமைச்சுப்பதவிகளைக் கேட்டு ஜனாதிபதி பின்னால் செல்லப்போவதில்லை என்று அவர்கள் கூறியுள்ளனர். (ச-22)


## மரண அறிவித்தல்

பிறப்்பு 12 . 11 . 1967



இறப்பு 09 . 05 . 2023

### திருமதி விஜயகுமார் நந்திகாதிலகேஸ்வரி

சுழிபுரம் மேற்கு, ஆலமோடையை பிறப்பிடமாகவும் இல.08 "திலகபவனம்" நெல்லியான் வீதி, சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயகுமார் நந்திகாதிலகேஸ்வரி நேற்று (09.05.2023) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கங்காணியார் சண்முகம், மீனாட்சிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், பார்த்தசாரதி பத்மாவதி ஆகியோரின் அன்பு மருமகளும் மற்றும் விஜயகுமார் (ஓய்வு பெற்ற நூலகர் வலி.மேற்கு பிரதேசசபை) அவர்களின் அன்பு மனைவியும், சூரியப்பிரகாஷ்(கொமர்சல் வங்கி, மன்னார்), சிவப்பிரகாஷ்(மாணவன், ATI, மடட்க்குளிய), ஜெயப்பிரகாஷ்(மாணவன், ஊவா வெல்லச பல்கலைக்கழகம்), சத்தியப்பிரகாஷ்(மாணவன், SLTC பாதுக்க) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமரர்களான வேலுப்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி மற்றும் சறோஜினிதேவி, யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மோகனகுமார்(லண்டன்) அவர்களின் அன்பு அண்ணியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.05.2023) வியாழக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 759 2647 (CS24825)(J-1)





**மா**ரிமழைகூட தோத்துப்போற அளவுக்கு இந்தமுறை கோடைமழை கொட்டித் தீர்த்திருக்கு. இன்னும் மழை இருக்கெண்டும் சொல்லுகினம். மழையால வெள்ளம் வருகுதோ இல்லையோ, உந்த டெங்கு மட்டும் மறக்காமல் பல்லை இளிச்சுக் கொண்டு வந்திடும். அதால டெங்கு வரமுன்னரே அணைகட்டுற வேலையளும் தொடங்கிட்டுது.

இந்த டெங்குக் கட்டுப்பாடு சம்பந்தமா நேற்று ஒரு கூட்டம் நடந்தது. அதில பிரதம செயலாளர் ஒரு விசயம் சொன்னார். 'டெங்கு மக்களுக்கு மட்டுமில்லை, இப்ப ஆமிக்காரருக்குத்தான் கூடவருகுது. அண்டைக்கும் ஒரு ஆமிப்பெட்டை டெங்கு வந்து செத்துப்போனா. வடக்கைவிட தெற்கில தான் டெங்குத்தாக்கம் கூட. லீவில வீட்டைபோற ஆமிக்காரர் அங்க டெங்கை வாங்கிக் கொண்டந்து இஞ்ச பரப்பக்கூடும். அதால முன்னேற்பாடா இப்பிடி லீவில போய்வாற ஆமிக்காரருக்கு டெங்குச் சோதனை செய்யிறது நல்லது' எண்டிருக்கிறார்.

அப்பிடி அவர் சொல்லிப்போட்டு இருக்கிறதுக்குள்ள அந்தக்கூட்டத்துக்கு ஆமிசார்பில கலந்து கொண்ட இணைப்பாளர் காஞ்சோண்டிபட்ட கராட்டி ஓணான் மாதிரி படக்கெண்டு எழும்பி 'சேர் இப்பிடியெல்லாம் அபாண்டமா ஆமிக்காரராலதான் டெங்கு பரவிற மாதிரிக் கதைக்கக் கூடாது. டெங்கை ஆமி பரப்பிறேலை. நுளம்புதான் பரப்புறது. நாட்டைக்காக்கிற ஆமிக்காரருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்திறமாதிரி பேசவேண்டாம்' எண்டு கடுப்போட சொல்லிப்போட்டு இருந்திட்டார். இத்தனைக்கும் பிரதம செயலரும் சிங்களவர், ஆமி சார்பா வந்தவரும் சிங்களவர். அதால பிரதம செயலர் தப்பிட்டார். இதுவே ஒரு தமிழ் அதிகாரி செய்திருந்தா இத்தறிக்கு ஆளுக்கு ட்ரான்ஸ்பர் கடிதம் பறந்து வந்திருக்கும்.

இவ்வளவும் நடந்தபிறகு, வடக்குமாகாண சுகாதாரத் திணைக்களப் பெரியவர் (அவரும் சிங்களவர்தானே) டெங்கு பற்றிப் பேச எழும்பினார். முஸ்லிம்காரர் கதைக்கேக்க அவையின்ர மார்க்கத்தில கடும் பக்தி உள்ள ஆக்கள், அடிக்கடி 'மாஸா அல்லாஹ்', 'இன்சா அல்லா' எண்டு சொல்லுவினம். அநேகமாக ஒவ்வொரு வசனத்துக்கு இடையிலும் இப்பிடிச் சொல்லியே தீருவினம். அதைமாதிரி நேற்றையான் கூட்டத்தில பேசின வடக்குமாகாண சுகாதாரத் திணைக்களப் பெரிய அதிகாரி, ஆமிக்கார அதிகாரியைப் பார்த்து 'பிரதம செயலாளர் அப்பிடிச் சொன்னதுக்கு மன்னிச்சுக்கொள்ளுங்கோ, மன்னிச்சுக் கொள்ளுங்கோ' எண்டு கூட்டம் முடியும் மட்டும் இந்த 'மன்னிச்சுக் கொள்ளுங்கோ' எண்ட மந் திரத்தைத் தான் மூச்சுக்கு முந்நூறுதரம் உச்சாடனம் பண்ணிட்டுப் போயிருக்கிறார். டெங்கு ஒழிப்புக் கூட்டமெண்டு தொடங்கி, கடைசியா பாவமன்னிப்புக் கேக்கிற கூட்டமா மாறிப்போட்டுது. என்னதான் இருந்தாலும் ஆமிக்கு இப்பிடி வழிஞ்சு போறது அதிகாரிமாருக்கு அழகில்லை கண்டியளோ.

(கொசுறுத்தகவல்: இப்பிடி ஆமிக்கு வாளி வைச்ச அந்த அதிகாரியின்ர பதவி நேற்று இரவோட இரவாப் பறிபோயிருக்கு. ஏற்கனவே அவருக்கும் கவர்னருக்கும் கொளுவல். அதாலதான் இந்தப் பதவி பறிப்பு போல.)



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட இளைஞர் மாவாவுடன் கைது!

யாழ்ப்பாணம், மே 10

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் கஞ்சா கலந்த மாவாப் பாக்குடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த 23 வயதான இளைஞர், யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குக்குச் செல்லாத நிலையில் அவருக்கு நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இளைஞர் நல்லூர் பகுதியில் வைத்து 11 கிராம் 800 மில்லிகிராம் கஞ்சா கலந்த மாவா பாக்குடன் கைது செய்யப்பட்டார். இளைஞருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் மீண்டும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-14,125)

# விடுதியிலிருந்த இரு மாணவர்கள் மாயம்!

## மாங்குளத்தில் பரபரப்பு

மன்னார், மே 10

மாங்குளம் பகுதியில் அமைந்துள்ள குருமடம் ஒன்றில் தங்கிநின்று, கல்வி கற்றுவரும் மன்னார் முத்தரிப்புத்துறை கிராமத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவரையும், வவுனியாவைச் சேர்ந்த மாணவர் ஒருவரையும் காணவில்லை என்று பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

மாங்குளத்திலுள்ள பிரபல பாடசாலையொன்றில் அவர்கள் இருவரும் கல்விகற்று வருகின்றனர். பாடசாலைக்குச் செல்வதற்காக துவிச்சக்கரவண்டியைத் தயார்படுத்துவதற்காக விடுதியிலிருந்து வெளியே சென்ற அவர்கள் இரவு நீண்டநேரமாகியும் விடுதிக்குத் திரும்பவில்லை. அவர்கள் தமது வீடுகளுக்குச் சென்றுவிட்டார்களா? என்பது தொடர்பில் விடுதி நிர்வாகத்தால் கேட்டறியப்பட்டு, அவ்வாறு செல்லவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-213)

# தாழமுக்கம் புயலாகிறது

யாழ்ப்பாணம், மே 10

மத்திய வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென்கிழக்கு திசையில் தோன்றிய தாழமுக்கம் புயலாக மாற்றம் பெறுவதற்கான நிலைமைகள் உருவாகத் தொடங்கியுள்ளன. இன்று இது புயலாக மாற்றம் பெறும். முன்னர் குறிப்பிட்டது போன்று பங்களாதேஷுக்கும் மியன்மாருக்கும் இடையில் இந்த புயல் கரையைக் கடக்கும் என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக புவியியற்றுறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல இந்தப் புயலால் இலங்கையின் எந்த ஒரு பகுதிக்கும் நேரடியான பாதிப்பு கிடையாது. எதிர்வரும் 12ஆம் திகதி வரை வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளுக்கு அவ்வப்போது மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் மறு அறிவித்தல் வரும் வரை கடலுக்கு செல்வதை தவிர்ப்பது சிறந்தது.

அதேவேளை வங்காள விரிகுடாவில் உருவாகவுள்ள இந்த புயல் எமது பிரதேசத்தில் காணப்பட்ட ஈரப்பதனை தன்னுடைய வெளி மற்றும் உள்வளையப் பகுதிகளுக்கு ஈர்த்துக் கொண்டிருப்பதன் காரணமாக இன்று நண்பகல் முதல் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் வெப்பநிலை அதிகரிக்கும். சில பிரதேசங்களில் மிதமான மழை கிடைத்தாலும், வெப்பநிலையும் உயர்வாக இருக்கும் - என்றுள்ளது. (ம)

# நாய்களை கட்டி வளர்க்க கோரிக்கை

சாவகச்சேரிப் பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களை கட்டி வளர்க்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. வீதிகளில் திரியும் வளர்ப்பு நாய்களால் பொதுமக்களுக்கு இடையூறுகள் ஏற்படுவதை அடுத்தே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வீதியில் பயணிப்போர் நாய்களால் கடியுறும் சம்பவங்களும், நாய்களால் ஏற்படும் விபத்துக்களும் அதிகரித்துள்ளன. அதனால் நாய்களைக் கட்டி வளர்க்கவேண்டும். எதிர்காலத்தில் வளர்ப்பு நாய்களால் ஏதேனும் பாதிப்புக்கள் ஏற்பட்டால் அவற்றின் உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (எ-9)

# சுயாதீன நிறுவனமாக மத்திய வங்கி; சட்டவரைவு விவாதம் ஒத்திவைப்பு!!

**கொழும்பு, மே 10**

**மத்திய வங்கியை சுயாதீன நிறுவனமாக மாற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டவரைவின் 2ஆம் வாசிப்பு மீதான விவாதம் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவிருந்த நிலையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.**

மத்திய வங்கியை சுயாதீன நிறுவனமாக மாற்றும் சட்டவரைவுக்கு எதிர்ப்புகள் வலுத்தன. சட்டவரைவு தொடர்பில் ஆராய்வதற்கு அவகாசம் தேவையென எதிரணிகளும், சிவில் அமைப்புகளும் வலியுறுத்தி வந்தன.

இதுதொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, "மத்திய வங்கி சட்டவரைவு தொடர்பில் மேலும் கலந்துரையாடப்பட்டு, அந்த சட்டவரைவை பொது இணக்கப்பாட்டுடைய சட்டவரைவாக மாற்றியமைப்பதற்கு காலஅவகாசம் வேண்டுமென ஜனாதிபதியிடம் தொலைபேசியூடாக கோரிக்கை விடுத்தேன். இதற்கு இணங்குவதாக ஜனாதிபதி என்னிடம் தெரிவித்தார். இதற்காக அவருக்கு நன்றி கூறுகின்றேன்- என்றார்.

அதற்குப் பதிலளித்த பிரதமர், "நாடாளுமன்ற நடவடிக்கை தொடர்பான குழுக்கூட்டத்தில், அடுத்த திகதி எப்போது என்பது பற்றித் தீர்மானிக்கலாம்" என்றார். (எ-14,44)

# ரயர் வெடித்து ஒருவர் காயம்

கிளிநொச்சி, மே 10

தருமபுரம் பகுதியில் டிப்பர் வாகனத்தின் ரயர் வெடித்ததில் ஒருவர் காயமடைந்துள்ளார். நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தனியார் ரயர்க் கடை ஒன்றில் டிப்பர் வாகனத்தின் ரயருக்கு காற்று நிரப்பப்பட்டது. அதன்போது திடீரென ரயர் வெடித்ததில் அருகில் நின்ற ஒருவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (எ-14,113)

# கடன் பேச்சுக்கு அமைச்சரவை இணக்கம்

கொழும்பு, மே 10

இலங்கையின் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்காக 200 மில்லியன் அமெரிக்க டொலரைக் கடன் பெறுவது தொடர்பில் உலக வங்கியுடன் கலந்துரையாட அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த யோசனையை முன்வைத்திருந்த நிலையில், அமைச்சரவை அதற்கு அனுமதி வழங்கியுள்ளது. (எ-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக் கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும் வார்த்தைகளில் கவனம் தேவை.

**மிதுனம்:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் மந்தமாகத்தான் இருக்கும்.

**கடகம்:** ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். உடல்ஆரோக்கியத்தில் கவனம் தேவை. முயற்சி சாதகமாக முடியும். வழிபாடு நலம் சேர்க்கும்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். ஆதாயம் உண்டாகும். செலவு செய்ய நேரிடும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகளை எடுக்கலாம். செலவுகள் ஏற்படும். உடல்நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். ஆதாயம் உண்டாகும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். பிரச்சினைகள் ஏற்படக்கூடும். செலவுகளால் கடன் வாங்க நேரிடும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. முடிவு எடுக்கையில் ஆலோசனை அவசியம்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக் கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனம்சார் கரிசனை அவசியம்!

தமிழர் தாயகப் பிரதேசத்தை பௌத்த மயமாக்கும் நடவடிக்கைகள் அண்மைக்காலமாக வெகு தீவிரமடைந்திருக்கின்றன. சட்டத்துக்குப் புறம்பாகவும், நீதிமன்றங்களின் உத்தரவுகளை உதாசீனம் செய்தும் இந்த பௌத்தமயமாக்கல் செயற்பாடுகள் அரச இயந்திரத்தின் முழு ஆதரவோடு முன்னெடுக்கப்படுகின்றன. இனத்தின் எதிர்கால இருப்பைத் தக்க வைக்க வேண்டுமானால், பேரினவாதிகளின் இந்தத் திட்டமிட்ட நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தவேண்டிய கடப்பாடு தமிழ் மக்களுக்கு இருக்கின்றது.

ஆனால், தமிழ் இனத்தின் இருப்பையே கேள்விக் குறியாக்கும் இந்தச் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துவதில் இந்த விடயங்களைக் கையாளுவதில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளும், தமிழ் அரசியல் தலைவர்களும் நடந்துகொள்ளும் போக்கு மக்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடியதாக இல்லை. 'மக்கள் வழங்கிய வாக்குகள் தாங்கள் நினைத்தவற்றையெல்லாம் செய்வதற்கான அனுமதி' என்ற எண்ணப் போக்கிலேயே தமிழ் மக்களின் பிரதிநிதிகளும், அவர்கள் சார்ந்த தமிழ் அரசியல் கட்சிகளும் நடந்துகொள்கின்றன. இனம் சார்ந்த விடயங்களிலும் அவை அந்தப் போக்கையே கைக்கொள்கின்றன.

வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட சிங்கள, பௌத்த மயமாக்கலுக்கு எதிராக தமிழ்த் தரப்புக்களால் போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டாலும் அவற்றால் எந்தத் தாக்கமும் உணரப்படவில்லை என்றே கூறவேண்டும். வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்பட்டுவரும் பேரினவாத அரசாங்கத்தின் நிகழ்ச்சிநிரல் எந்தத் தடங்கலும் இன்றித் தொடர்ந்தவண்ணமே இருக்கின்றது. அரசாங்கத்தையோ, சர்வதேசத்தையோ திரும்பிப் பார்க்க வைக்கும் எதிர்ப்பு நடவடிக்கைகளை கட்டமைக்க முடியாதமைக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகளிடம் காணப்படும் சுயநலன் சார்ந்த செயற்பாடுகளே காரணம் என்பதை எவரும் மறுக்க முடியாது.

போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்களால் கிடைக்கும் பிரபல்யம் தங்களுக்கு மட்டுமே கிடைக்கவேண்டும், தங்கள் கட்சிக்கு மட்டுமே கிடைக்க வேண்டும் என்ற பேராசையும், அதை வாக்குகளாக மாற்றி எப்படியாவது பதவிகளைப் பெற்றுவிடவேண்டும் என்ற நப்பாசையுமே தமிழ்த் தரப்புகளால் ஏற்பாடு செய்யப்படும் போராட்டங்களை வீரியமற்றதாக்குகின்றன. சில தினங்களுக்கு முன்னர் தையிட்டியில் நடந்த விகாரைக்கு எதிரான போராட்டத்திலும் இந்தத் தன்மை எதிரொலித்ததைக் காணமுடிந்தது.

இனம் சார்ந்த விடயங்களில் தங்கள் கட்சி அரசியலையும், சுயநல அரசியலையும் கைவிட்டு ஒன்றுபட்டுச் செயற்படாவிட்டால் போராட்டங்களால், ஆர்ப்பாட்டங்களால் எதுவும் மாறிவிடப் போவதில்லை. அரசியல் கட்சிகள் என்ற ரீதியில் கொள்கை முரண்பாடுகள் இருந்தாலும் இனம் சார்ந்த பிரச்சினைகளில் தமிழ்த் தரப்புக்கள் ஒன்றுபட வேண்டியது அவசியம். அவ்வாறு ஒன்றுபடாது ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு போராட்டத்தை ஏற்பாடு செய்து எந்தப் பயனும் இல்லை என்று தெரிந்தும் அவ்வாறு செயற்படுவது தமிழ் மக்களை மடையர்களாக்கும் செயலேயன்றி வேறில்லை.

மக்களின் வாக்குகளால் பதவிகளில் அமர்ந்திருப்போருக்கு உண்மையிலேயே இனம் சார்ந்த கரிசனை இருக்குமானால், தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படும் பௌத்தமயமாக்கலுக்கு எதிராக ஒன்றிணைய வேண்டும். அதைவிடுத்து போராட்டம் செய்து, பேஸ்புக்கில் படங்களைப் பதிவேற்றினால் சரி என்றுமட்டும் செயற்படுவார்களேயானால் காலமும், மக்களும் தகுந்த பதிலை வழங்கவேண்டிய நிலை உருவாகிவிடும்.

### நாளொரு நல்வார்த்தை

"உண்மையான நம்பிக்கை மட்டும் ஒருவருக்கு இருக்குமாயின், அந்த நம்பிக்கை மலைகளைக்கூட அசைத்து விடும்"

— ஜவஹர்லால் நேரு




# சூழல் பாதுகாப்பை உறுதிசெய்ய அரசமைப்பில் திருத்தம் அவசியம்

## மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்து

**கொழும்பு, மே 10**

**சுற்றுச்சூழலின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் அரசமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.**

போர்ள் கப்பல் தீ விபத்து காரணமாக சுற்றுச் சூழலுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற நீதியரசர் ரோஹிணி மாரசிங்க வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை யில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

எக்ஸ்பிரஸ் போர்ள் கப்பல் தீ விபத்தால் ஏற்பட்ட பேரழிவு குறித்து அண்மைய வாரங்களில் பெறப்பட்ட முறைப்பாடுகளை மனித உரிமைகள் ஆணைக்குழு மதிப்பாய்வு செய்கின்றது.

போர்ள் கப்பல் தீவிபத்து, சுற்றுச்சூழலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கடற் சூழல், மக்களின் ஆரோக்கியத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அளவிடப்படவில்லை.

கடலிலும் கரையோரப் பகுதியிலும் அதிகரிக்கும் நச்சுத்தன்மை வாய்ந்த நைட்ரிக் அமிலம் உள்ளிட்டவற்றால் ஏற்படும் மாசுபாடானது மிகப் பெரிய சுற்றுச்சூழல் பேரழிவாகும். இந்தப் பாதிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு அனைவருக்கும் ஆரம்ப சுகாதாரத்தை வழங்குவது ஓர் அடிப்படை உரிமையாக உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை, ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெற்றுள்ளதாலும், மனித உரிமைகள் தொடர்பான உலகளாவிய பிரகடனம் போன்ற பல உடன்படிக்கைகளில் கையெழுத்திட்டுள்ளதாலும், சுற்றுச்சூழலின் பாதிப்பை உறுதிப்படுத்தும் வகையில் அரசமைப்பில் திருத்தம் செய்யவேண்டும். அரசமைப்பு ரீதியாக பாதுகாக்கப்பட்ட அடிப்படை உரிமைகளுடன் நேரடித் தொடர்பை இந்த விடயம் கொண்டுள்ளது- என்றுள்ளது. (ச-இ)

## அதிகாரப்பகிர்வு விடயத்தில் கனேடிய அரசு தலையிடுக!

### கலாநிதி ஜெஹான் வேண்டுகோள்

இலங்கையின் இனமுரண்பாட்டுக்கு அரசமைப்பு ரீதியான தீர்வு என்ற வகையில் மாகாண சபைகளைப் பலப்படுத்துதல் மற்றும் அதிகாரப் பகிர்வு என்பவற்றை முன்னிறுத்தி அதற்கு அவசியமான கட்டமைப்புக்களை நிறுவுவதற்கு கனேடிய அரசாங்கம் அழுத்தம் பிரயோகிக்கவேண்டும் என சிவில் சமூக செயற்பாட்டாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனேடிய பூகோள விவகாரங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட அதிகாரி நவீதா ஹுஸைனுக்கும் சிவில் சமூக செயற்பாட்டாளர் கலாநிதி ஜெஹான் பெரேராவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

சந்திப்பின்போது கனேடிய அரசாங்கத்திடமிருந்து இலங்கைக்கு எத்தகைய உதவிகள் தேவைப்படுகின்றன என அந்த நாட்டின் சிரேஷ்ட அதிகாரி நவீதா ஹுஸைன் ஜெஹான் பெரேராவிடம் கேட்டறிந்தார்.

தற்போது இலங்கையில் இயங்கிவரும் காணாமற்போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் என்பன பற்றி கலாநிதி ஜெஹான் பெரேரா எடுத்துரைத்தார்.

மேலும் மாகாணசபைகளைப் பலப்படுத்தல், அதிகாரப் பகிர்வு ஆகியவை குறித்து அவதானம் செலுத்தவேண்டும் என்றும் கனேடியப் பிரதிநிதியிடம் கலாநிதி ஜெஹான் பெரேரா வேண்டுகோள்விடுத்தார். (ச-இ)

**நாளை** 11.05.2023 வியாழக்கிழமை சித்திரை 28

சுபநேரம் : 07.24 - 08.54
ராகுகாலம் : 01.24 - 02.54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், மே 10
வேலணைப் பிரதேச செயலக ஊழியர் நலன் புரி சங்கத்தின் ஏற்பாட்டில் குருதிக் கொடை முகாம், இன்று புதன் கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை வேலணைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குருதிக் கொடை முகாமில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், குருதிக் கொடையாளர்கள் மற்றும் ஆர்வலர்களைத் தவறாது கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (எ-14,66)

# இம்மாத முதல் வாரத்தில் 1,896 டெங்குத் தொற்றாளர்

**கொழும்பு, மே 10**



**இந்த மாதத்தின் முதல் வாரத்தில் மட்டும் ஆயிரத்து 896 டெங்குத் தொற்றாளர்கள் நாட்டில் இனங்காணப் பட்டுள்ளனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.**

இவர்களில் அதிகமானோர் மேல் மாகாணத்தில் இனங்காணப்பட்டுள்ளனர். கடந்த மாதத்தின் இறுதி வாரத்துடன் ஒப்பிடுகையில், இந்த மாதத்தின் முதல் வாரத்தில் கம்பஹா மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

கொழும்பு, கம்பஹா போன்ற அதிக நோயாளர்கள் பதிவாகும் மாவட்டங்களுக்கு விசேட டெங்குக் கட்டுப்பாட்டு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

பருவ மழையை எதிர்கொள்ளும் வகையில் தமது வீடுகளையும் சுற்றுப்புறங்களையும் மக்கள் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவுறுத்தியுள்ளார். (ச-இ)



## டெங்கைக் கட்டுப்படுத்த கிளிநொச்சியில் கூட்டம்


கிளிநொச்சி, மே 10
டெங்கு நோய் தொடர்பாகவும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பாகவும் கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் டிலிப் எச் லியனகே, கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ம.ஜெயராசா, கரைச்சி மற்றும் கண்டாவளைப் பிரிவுகளின் மருத்துவ அதிகாரிகள், மேலதிக மாவட்டச்செயலர், பிரதேச செயலர்கள், மாவட்ட இடர் முகாமைத்துவ சேவை நிலையப் பணிப்பாளர், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், இராணுவத்தினர், பொலிஸார் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-14,113)

## வில்லூன்றி விநாயகர் மஹோற்சவம் இன்று

யாழ்ப்பாணம், மே 10
யாழ்ப்பாணம், வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (எ-14)



# வெடிபொருள்களுடன் ஏழு மீனவர்கள் கைது!

மன்னார், மே 10
சட்டவிரோத மீன்பிடிக்குப் பயன்படுத்தப்படும் வெடிபொருள்களுடன் ஏழு மீனவர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் நகர் கடற்கரைப் பகுதியிலிருந்து மன்னார் தென் கடற்பரப்புக்கு ஏழு மீனவர்கள் ஒரு வெளிக்களப் படகில் சட்டவிரோத மீன்பிடிக்காகச் சென்றுள்ளனர்.

வெளிக்களப் படகை அவதானித்த வங்காலை கடற்படையினர், படகை சோதனையிட்ட போது சட்டவிரோத மீன்பிடிக்குப் பயன்படுத்தப்படும் டைனமைற் வெடிபொருள்களைக் கைப்பற்றினர். அத்துடன் படகுடன் ஏழு மீனவர்களையும் கைது செய்தனர்.

அதனையடுத்து மன்னார் கடற்றொழில் திணைக்களம், மீனவர்களையும் சான்றுப் பொருள்களையும் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் மீனவர்களை சான்றுப் பொருள்களுடன் மன்னார் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மன்னார் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (எ-14,60)

## கொலைக் குற்றச்சாட்டிலிருந்து நால்வர் நீதிமன்றால் விடுவிப்பு!

மன்னார், மே 10



கொலைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார், மடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தட்சணார் மருதமடுப்பகுதியில் நபர் ஒருவர் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியால் வெடிபட்டு உயிரிழந்தமை தொடர்பில் நான்கு சந்தேகநபர்கள் கடந்த மார்ச் மாதம் 25ஆம் திகதியன்று கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

வழக்கு மன்னார் நீதிவான் நீதிமன்றில் நீதிபதி நிரஞ்சனி முரளிதரன் முன்னிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சந்தேகநபர்கள் சார்பில் மன்றில் முன்னிலையான பிரபல சட்டத்தரணி செ.டினேசன் சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையிலும் சாட்சிகளின் வாக்குமூலங்கள் அடிப்படையிலும் கொலைக் குற்றத்திலிருந்து நான்கு சந்தேகநபர்களும் விடுதலை செய்யப்பட்டனர். (எ-14,60)



## மண்டைதீவில் கஞ்சா மீட்பு!

யாழ்ப்பாணம், மே 10
ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்டைதீவுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 84 கிலோகிராம் 450 கிராம் கஞ்சா கடந்த ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

மண்டைதீவு தெற்குக் கடற்கரைப் பகுதியில் கஞ்சா பதுக்கி வைக்கப்பட்டுள்ளது என்று கடற்படையினருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய கஞ்சா மீட்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஊர்காவற்றுறைப் பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (எ-14,125)

# தலைமன்னார் – இராமேஸ்வரம் கப்பல் சேவை ஏற்பாடு பூர்த்தி!

## ஸ்ரான்லி டிமெல் தெரிவிப்பு

மன்னார், மே 10
தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் போக்குவரத்து சேவைக்கான நடவடிக்கைகள் தற்பொழுது முன்னெடுக்கப்படுகின்றன என்று மன்னார் மாவட்டச்செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மன்னார் மாவட்டம் அதிக வளங்களைக் கொண்ட ஒரு மாவட்டம் என்று பலராலும் போற்றப்பட்டு வருகின்றது. இங்குள்ள வளங்கள் சரியான முறையில் இனங்காணப்பட்டு சூழலுக்குப் பாதிப்பு ஏற்படா வண்ணம் அபிவிருத்தி செய்யும் பட்சத்தில் எமது மாவட்டம் மட்டுமல்ல எமது மாகாணம் நமது தேசம் பயனடையக் கூடியதாக பல்வேறு தரப்பினராலும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.


அந்த வகையில் தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் போக்குவரத்துச் சேவைக்கான நடவடிக்கை தற்பொழுது முன்னெடுக்கப்படுகின்றது. இதற்கான நில அளவை மன்னார் பிரதேச செயல்ருடன் இணைந்து தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதே போன்று எமது மன்னார் நகரப் பகுதியில் அமைந்திருக்கும் மன்னார் கோட்டையையும் அபிவிருத்தி செய்து சுற்றுச் சூழல் பிரதேசத்தை சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து கொள்வதற்கான ஓர் இடமாக மாற்றுவதற்கும் நடவடிக்கை மேற்



கொள்ளப்பட்டு வருகின்றது. எனவே அனைவரும் ஒன்றிணைந்து மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குவோம் -என்றார். (எ-14,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை





"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது..." -வள்ளுவர்

திரு.நடேசு தயாளன்
யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி

# 21ஆம் நூற்றாண்டுக்கான கல்விச் செயன்முறைகள்



21ஆம் நூற்றாண்டானது மக்களின் வாழ்க்கை முறையில் மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக பொருளாதார நிலைசார்ந்ததாக இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. இங்கு கைத்தொழில் யுகத்தில் இருந்து அறிவு யுகத்துக்கான மாற்றம் நிகழ்ந்துள்ளமை நோக்குதற்குரியது. இந்தநிலையில் எதிர்கால உலகில் வாழ்வதற்கும் தொழில் உலகின் சவால்களை வெற்றி கொள்வதற்கும், கல்வியை வழங்குவோரும், கல்வியை வழங்கும் நிறுவனங்களும் கல்விச் செயன்முறைகளினூடாக பின்வரும் திறன்களைக் கற்போனிடம் வளர்த்தல் அவசியமாகும்.

விமர்சன ரீதியான சிந்தனை, ஆக்கமலர்ச்சிச் சிந்தனை, கூட்டிணைவான செயற்பாடு, சிறந்த தொடர்பாடல் திறன், தகவல் தொழில்நுட்ப அறிவு, ஊடகத் திறன், நெகிழ்வுத் தன்மை, சிறந்த தலைமைத்துவத் திறன், உற்பத்தித் திறன், சமூகத்திறன், இத்தகைய திறன்களைப் பாடசாலையில் மாணவர்களிடம் வளர்க்கப்படுமிடத்து பாடசாலைக் கல்வியினை நிறைவு செய்யும் மாணவர்கள் தொழில் உலகின் போட்டிகளைச் சிறப்பான முறையில் வெற்றி கொள்ள முடியும் என்பதோடு நற்பிரஜையாகவும் வாழமுடியும்.

எழுத்து, வாசிப்பு, மற்றும் கணிக்கும் திறன்களைப் பாடங்களுடாக வழங்குதல், கற்கும் திறன் எழுதும் திறன் வாழ்க்கைத்திறன் என்பவற்றினை வழங்குதல், சமூக மனவெழுச்சிக் கற்றலை வழங்குதல், குடிமகனின் உரிமைகள் கடமைப் பொறுப்புக்கள்பற்றி அறியச் செய்தல், கலாசார பல்வகைமைகளை ஏற்றுக் கொள்ளல் மற்றும் பொதுப்பெறுமானங்களை மதிக்கும் திறன் என்பவற்றினையும் உள்ளடக்கியதாக 21ஆம் நூற்றாண்டுக்கான கல்வி அமைதல் வேண்டும் என கருதப்படுகின்றது.

## எத்தகைய கல்வி இப்போது தேவை

கல்வியானது நிலையான அபிவிருத்திக்கும் நிலையான சமாதானத்துக்கும் பங்காற்ற வேண்டும் என்பதோடு பிராந்திய அபிவிருத்திக்குப் பங்காற்றுவதோடு பிராந்திய ஏற்றத்தாழ்வுகளையும் குறைப்பதாக இருக்கவேண்டும். 21ஆம் நூற்றாண்டுக்கான கலைத்திட்டமானது வெளியீட்டினை அடிப்படையாகக் கொண்டதாகவும் ஆய்வுச் செயன்முறையினை உள்ளடக்கியதாகவும், கற்போன் மையமானதாகவும், செயற்பாட்டு நிலையினதாகவும், உயர்மட்ட எண்ணங்கள் கொண்டதாகவும் வாழ்க்கை நீடித்த திறன்களை விருத்தி செய்வதாகவும் அழுத்தங்களற்ற ஆரோக்கியமான சூழலை வழங்கக் கூடியதாகவும் மகிழ்ச்சிகரமான கற்றலையும் வழங்குவதாகவும் மாற்றியமைக்கப்படுகின்றது. 21ஆம் நூற்றாண்டுக் கற்றலானது சுயநெறிப்படுத்தப்பட்ட கற்றலாக இடம்பெறுவது அவசியமானதாகும்.

இங்கு கற்போன் சுயமாகத் தெரிவுசெய்து கொண்ட செயற்பாடுகளுடாக தீர்மானிக்கப்பட்ட இலக்குகளை, தெரிவு செய்யப்பட்ட அமுலாக்கல் முறைகளுடாக அடைவதற்கான கற்றலை மேற்கொண்டு அனுபவங்களைத் திரட்டுவதற்கு வாய்ப்புக்கள் வழங்கப்படுவது அவசிமானதாகும்.

சுயநெறிப்படுத்தப்பட்ட கற்றலானது கற்றல் தந்திரோபாயத்தினையும் செயன்முறைகளையும் தீர்மானித்துக் கற்பதற்கு வாய்ப்பளித்தலாகும்.

## சுயநெறிப்படுத்தப்பட்ட கற்றலின் அவசியம்

சுய நெறிப்படுத்தப்பட்ட கற்றலில் ஈடுபடுபவன் சுய வலுவூட்டலுக்கு உட்படுபவனாகவும் அதனூடாக சுய கற்றலில் ஈடுபடவும் முடிகின்றது என்பதோடு பிரச்சினை தீர்க்கும் கற்றல் திறனினையும் பெற்றுக்கொள்ள முடியும். சுயநெறிப்படுத்தப்பட்ட கற்றலை மாணவனிடம் ஊக்குவிக்கும்போது கற்றலின் இலக்கினை இனங்காணும் திறன் விடயங்களை ஏன்? எதற்கு? என வினா எழுப்புவதனூடாக தீர்வினை பெறும் திறன், சவால்களை இனங்காணும் திறன், என்பவற்றினை கற்போனிடம் வளர்க்க வேண்டும். மேலும் கற்க வேண்டிய திறன்களைத் தொகுதியாக்கும் ஆற்றல் தனது கற்றலானது தனது இயலுமைக்குட்பட்டது என்பதனை இனங்கானும் திறன் குறித்த விடயங்களை கற்கும் ஏனைய சகபாடியுடன் சேர்ந்து செயற்படும் திறன் என்பவற்றினையும் பெற்றவனாக கற்போன் வளர்க்கப்பட வேண்டும். 21ஆம் நூற்றாண்டுக்கான பாடசாலையின் வகுப்பறையானது விரிவுரைக்குப் பதிலாக கலந்துரையாடல் சார்ந்ததாக அமைந்து காணப்படும். ஆசிரியர் வளவாளராகச் செயற்படுவார். கற்றல் செயற்பாட்டில் கற்போர் சிறுகுழுக்களாகச் செயற்படுவர். இங்கு கூட்டிணைவான கற்றல் செயற்பாடுகள் இடம்பெறும். மாணவர் மையமான கற்றல் இடம்பெறுவதோடு சுதந்திரமான கற்றலும் இடம்பெறும். இது நவீன தொழில்நுட்பசாதனங்கள் நிறைந்த வகுப்பறையாகவும் காணப்படும். 21ஆம் நூற்றாண்டுக் கற்போனானவன் சுய நெறிப்படுத்தப்பட்ட வாழ்க்கை நீடித்த கற்போனாகவும் தூரநோக்குடைய கற்போனாகவும் கூட்டினைவான தொடர்பாளராகவும் தகவல் தொடர்பான முகாமைத்திறன் உடையவராக



வும் ஆரோக்கியமான மனிதராகவும், உலகக் குடிமகனாக விளங்குவதற்கான திறனினைப் பெற்றவராகவும் நெகிழ்வுப் போக்கான சிந்தனையாளராகவும் விளங்குவார். 21ஆம் நூற்றாண்டுக்கான பாடசாலை அதிபரது வகிபாகமானது ஏனையவர்களை வலுவூட்டுவதாகவும் தீர்மானங்களை விருப்புடன் எடுக்கக் கூடியவராகவும் இருக்க வேண்டும் ஏனெனில் பாடசாலையானது சிக்கலான செயன்முறைக்கு உட்பட்ட இடமாகும். அந்த நிறுவனத்தின் இயங்கு நிலையில் எவ்வாறு அந்த நிறுவனத் தலைவரானவர் தனது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்றார் என்பதனைப் பொறுத்தே பாடசாலையின் செயற்றிறனை நோக்க முடியும். பாடசாலைத் தலைவரானவர் தான் சிறந்த சமூகத்திடம் நம்பிக்கையினையும் உறுதியினையும் கட்டியெழுப்புவதன் மூலம் பாடசாலையினைப் புதிய கலாசாரச் செயன்முறைக்கு இட்டுச் செல்வதனூடாக நோக்கக் கூற்றினையும் பணிக்கூற்றினையும் உருவாக்க முடியும்.

இவை இரண்டும் பாடசாலைத் தலைவரினை சரியான திசையின்பால் வழிநடத்தப் பங்காற்றுவதாக இருக்கும் பாடசாலையின் உரித்தாளர்களிடம் சிறந்த வாண்மைத்துவத் திறன்களைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் மனஎழுச்சிசார் நுண்மதித் திறன் சுயவிழிப்புனர்வு சுயமுகாமைத்துவம் சமூகவிழிப்புணர்வு தொடர்பாடற் கோலம் என்பன இன்றியமையாத திறன்களாகவுள்ளன. சிறப்பான தொடர்பாடற் கோலத்தினை; கட்டியெழுப்புவதன் மூலம் பிரச்சினைகளை இனங்காண முடியும் என்பதோடு அவற்றுக்கான தீர்வுகளையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனால் பாடசாலையின் வளர்ச்சி சார்பான கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளவும் முடியும். பாடசாலைத் தலைவரானவர் முறைசார்ந்த முறைசாரா வகையில் செயற்படுவதனூடாக நம்பகரமானதாகவும் அர்ப்பணிப்பு மிக்கதுமான வாண்மைத்துவ அணியினை உருவாக்கிக் கொள்ள முடியும்.

இதன் மூலம் தரமான கல்வியினை மாணவர்களுக்கு வழங்குவதனூடாக அவர்களின் கற்றல் மட்டத்தினையும் உயர்வடையச் செய்ய முடியும்.

21ஆம் நூற்றாண்டு அதிபரானவர் கல்வித் தலைமைத்துவத்தினை வழங்கக் கூடிய அறிவுறுத்தல் திட்டங்களை வகுக்கக் கூடியவராக அணியுருவாக்கத்தினை ஏற்படுத்தக் கூடியவராக உணர்திறன் உடையவராக விளங்குதல் வேண்டும். மேலும் சிக்கலான பிரச்சினைகளைத் தீர்க்கும் திறனுடையவராக விளங்க வேண்டும்.

இதற்காகத் தீர்மானங்களை மேற்கொள்ளும் திறன் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடு ஒழுங்கமைக்கும் திறன் என்பவற்றினையும் கொண்டிருத்தல் வேண்டும். ஆத்துடன் அதிபரானவர் சிறந்த தொடர்பாடற் திறனுடைவராகவும் விளங்குதல் வேண்டும். இங்கு வாய் மொழி மூலமான தொடர்பாடற் திறன் மற்றும் எழுத்து மூலமான தொடர்பாடற் திறனும் அவசியமானதாகும்.

பாடசாலைத் தலைவரான்வர் செயற்பாடுகளில் ஈடுபடுபவராகவும் பாடசாலைசார் சமூகத்தினரால் அணுகக் கூடியவராக நேர் மனப்பாங்குடையவராக பாடசாலையின் நோக்கக் கூற்றினை வடிவமைக்கக் கூடியவராக சிறந்த தொடர்பாடற் கோலத்தினையுடையவராக தொடர்ந்து கற்பவராக காலந் தாழ்த்தாது வெளிப்படைத் தன்மையுடன் தீரமானம் எடுத்துச் செயற்படுபவராகவும் விளங்குதல் வேண்டும்.

கல்வியை வழங்கும் செயன்முறையில் பங்கு கொள்ளும் கல்வித் திட்டமிடலாளர்கள் அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் நிறுவனங்களும் 21ஆம் நூற்றாண்டுக்கான கல்வியை வழங்குவதில் புதிய செல்நெறிகளை உருவாக்குவது காலத்தின் கட்டாயமாகும் இதன் மூலமே எதிர்காலத்துக்குப் பொருத்தமான பிரஜைகளை உருவாக்கிக் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதை நூல்கள் வெளியீடு

யாழிசைக் கவித்தடாக ஆண்டு விழாவும் கவிஞர் உடுவிலூர் கலா எழுதிய நூல்கள் வெளியீட்டு நிகழ்வும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் மருதனார்மடத்தில் அமைந்துள்ள வட இலங்கைச் சங்கீத சபை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

கவிஞர் சு.முகுந்தன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் யாழ். மாநகர சபையின் ஆணையாளர் த.ஜெயசீலன், யாழ்.மாவட்டச் செயலக கலாசார உத்தியோகத்தர் இ.கிருஷ்ணகுமார் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெ.உதயகுமார், திருகோணமலை கோட்டக் கல்வி ஓய்வுநிலைப் பணிப்பாளர் பத்தகுட்டி மதிபாலசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

84 கவிஞர்களின் கவிதைகளை உள்ளடக்கிய யாழிசைத் தொகுப்பு நூலை தொழிலதிபர் அ.கிருபாகரன் வெளியிட்டு வைத்தார். பெண்ணியம் சார்ந்த கவிதைகளை உள்ளடக்கிய வேள்வித் தீயில் கவிதை நூலை வடமாகாண இளைஞர் சேவைகள் மன்ற ஓய்வுநிலைப் பணிப்பாளர் திருமதி.விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் வெளியிட்டு வைத்தார்.

அதனைத் தொடர்ந்து இலக்கியம் பேசினால் எனும் தலைப்பில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெ.உதயகுமார் தலைமையிலும், முகிழும் முதியோர் இல்லங்கள் எனும் தலைப்பில் கவிஞர் சு.முகுந்தன் தலைமையிலும் சிறப்புக் கவியரங்கங்களும் நடைபெற்றன.



## 'அந்நியத்தின் விலாசம்'

கவிஞர்.சிவசேகரனின் அந்நி யத்தின் விலாசம் கவிதை நூல் அறிமுக விழா எழுத்தாளர் வேல் நந்தகுமார் தலைமையில் வடமராட்சி குடத்தனை வடக்கில் அமைந்துள்ள அகரம் உதவும் கரங்கள் நலன்புரிச் சங்க வளாகத்தில் கடந்த 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (66)



வற்றாப்பளை கலையியல் திரைப்பட சர்வதேச கூடத்தின் ஏற்பாட்டில், அகங்கனலி கலை நிகழ்வுகள் யாழ். பழைய கச்சேரி வளாகத்துக்குள் கடந்த 15ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றன.

நிகழ்வில் பல விருதுகளை வென்ற ஆரோகணா அரங்கக் கல்லூரியின் 'இராவணேசன்' நாடகம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.




கலாபூஷணம் கீழ்கரவை குலசேகரன்
ஓய்வுநிலை பிரதேச முகாமையாளர்
இலங்கை வங்கி

# 'முயன்றால் முடியும்' சிறுவர் கதை கண்ணோட்டம்

சிறுவர் இலக்கியங்களைப் படைக்கும் படைப்பாளிகளின் தொகை அருகிக் கொண்டிருக்கும் இக் காலத்தில், அவர்களுக்கும், அவ் இலக்கியங்களைப் படிப்பவர்களுக்கும் ஆர்வம் ஊட்டும் வகையில் வெளிவந்திருப்பதுதான் 'முயன்றால் முடியும்' என்ற சிறுவர் கதை நூலாகும். இந்நூலை ஆக்கி அளித்திருப்பவர், கல்விப் பணி சிறக்க நல்லுழைப்பை ஈந்துகொண்டிருக்கும் ஆசிரியை திருமதி ஜெயகுமாரி கந்தவேள் ஆவார்.

நூலானது 11 கதைகளை உள்ளடக்கியதோடு சிறுவர்களைக் கவரும் அழகிய அட்டைப் படத்தையும், பின் அட்டை திருமதி ஆரபி சிவகுகனின் நூல் ஆசிரியர் பற்றிய அறிமுகத்தையும் கொண்டு வெளிவந்துள்ளது.

கதைகள் முழுவதிலுமே ஆறறிவு படைத்த மனிதர்களுக்கு ஆறறிவற்ற மிருகங்களும், தாவரங்களும் தமது செயல்கள், சம்பாஷணைகள் மூலம் புத்தி புகட்டுவதாகக் காட்டியிருப்பது படைப்பாளியின் கற்பனை சக்தியைப் புடம்போட்டுக் காட்டுகிறது. அவரது ஆக்கத்திறனுக்கு அணி சேர்க்கிறது.

சிறுவர்களின் சிந்தனைகளைக் தூண்டும் வண்ணமும் அறிவு புகட்டும் வண்ணமும் அமைந்த இக்கதைகள் அவர்களின் மனங்களில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. பெற்றோர்களின் அபிலாஷைகளும் அதுவே ஆகும்.

கதைகளைப் பொறுத்தவரையிலும் 'கண்திறந்தது' என்ற கதை மூலம் கூடப் பிறந்த பிள்ளைகள் இருவருக்கிடையில் நடைபெறும் சண்டைகளைத் தீர்ப்பதில் பூனைகளின் பங்கு பாராட்டும் வண்ணம் அமைந்திருக்கிறது. கொக்கும் ஆந்தையும் என்ற கதை மூலம், அழகு மட்டும் இருந்தால் போதாது பொது நலநோக்கும் வேண்டும்! என்று சிங்கத்தின் மூலம் தெரிய வைப்பது சிறப்பாக இருக்கிறது.

'வீட்டுத் தோட்டம்' என்ற கதை மூலம், நரியின் தந்திரத்தை முறியடித்து, இயற்கைப் பசளை மூலம் வனத்தை மிருகங்கள் வளமானதாக்குவது விளக்கப்படுகிறது. அதனைக் கண்டு நாட்டு மக்களும் வீட்டுத் தோட்டங்களை அமைக்க விளைகின்றனர். பாரம்பரிய விவசாய முறைகளை வளர்ப்பதற்கான முறையை இக்கதை நினைவூட்டுகிறது. 'முயன்றால் முடியும்' என்ற தலைப்புக் கவிதை மூலம், ஆசிரியரின் அறிவுரையைக் கேளாத மாணவர்களை அணில்களின் மூலம் திருத்த முனைந்திருப்பது கதாசிரியரின் கற்பனை வளத்தைக் காட்டுகிறது.

'குரங்கும் கைப்பேசியும்' என்ற கதைமூலம், ஏற்படுகின்ற கலாசார பின்னடைவுகளை நாசுக்காக விளக்கி, எங்கள் பாரம்பரிய கலாசாரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றார். கதாசிரியர் 'முன் மாதிரி' என்ற கதை மூலம் கல்வியின் முக்கியத்துவத்தை செம்மறியாட்டின் மூலம் உணர வைத்து 'கற்றவர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்ற உண்மையையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

'அடாது செய்தோர் படாது படுவார்' என்ற கதை மூலம் வஞ்சனை செய்த வெள்ளையனுக்கு அவனது அகங்காரத்துக்குக் கிடைத்த தண்டனையை எடுத்துரைத்திருக்கிறார். 'முல்லையும் முள்ளியும்' கதை மூலம் முல்லையின் வெள்ளை மனத்தையும், முள்ளியின் தாழ்வு மனப்பான்மையையும் விளக்கி அவர்களிடம் சாமர்த்தியமாகச் சமரசத்தை ஏற்படுத்த முனைந்திருக்கிறார்.

'காகமும் மயிலும்' என்ற கதை மூலம் இரு பறவைகளுக்கிடையே ஏற்படுத்த கருத்து மோதல்களை வெளிப்படுத்தி அன்னத்தின் மூலம் அதனை முடிவு பெறச் செய்து பொது நலத்தின் முக்கியத்துவத்தை விள்க்கியிருப்பது மிகச் சிறப்பாகவே இருக்கிறது.

குருநிந்தை என்ற கதை மூலம் 'குறும்பா' என்ற குள்ளநரிக்கு ஏற்பட்ட கதியை விளக்கி குருநிந்தை செய்யும் செய்யும் மாணவர்களுக்கு நல்ல பாடம் புகட்டியிருக்கிறார் ஆசிரியர். 'பகைவரும் நண்பர்களே' என்ற இறுதிக்கதை மூலமாக ஆமை, நண்டு, கொக்கு, பாம்பு ஆகிய கதாபாத்திரங்களைக் கொண்டு அன்பு, பண்பு, உதவுகின்ற மனப்பான்மை, நன்றி மறவாமை என்பவற்றை அழகாகக் கதாசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார்.

சிறுவர்களின் சிந்தனையைத் தூண்டவல்ல சிறுகதைகளைப் படைத்ததன் மூலம், வருங்கால சந்ததியினர்க்கு ஒரு வழிகாட்டியாக, அறிவு புகட்டும் நல்லாசிரியையாக திகழ்கின்றார். கதாசிரியை வெறும்பொழுதுபோக்கு இலக்கியங்களைப் படைப்போர்கள் மத்தியில் இத்தகைய அறிவு புகட்டும் ஆக்கங்கள் வெளிவருவது வரவேற்கத்தக்கதாகும். இலகு தமிழில் வெளிவந்திருக்கும் இப் புத்தகத்தை கண்டிப்பாக மாணவச் செல்வங்கள் விரும்பிப் படிப்பதுடன் மனித விழுமியங்களை வளர்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலி நாணயத்தாள்கள்

# 18 வயதான இளைஞர் இயந்திரத்துடன் கைது

போலி நாணயத்தாள்களை அச்சிடும் மின்னியல் இயந்திரத்துடன் 18 வயதான இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

1.3 மில்லியன் ரூபா போலிப் பெறுதியான நாணயத் தாள்களுடன் இளைஞர் ஒருவர் பளையில் வைத்து அண்மையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், இந்தப் போலிப்பெறுமதி நாணயத்தாள்களுடன் தொடர்புடையவர் என்று அடையாளப்படுத்தப்பட்ட நபரே யாழ். நகர்ப் பகுதியில் வைத்து நேற்றுக் கைதுசெய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வீதியில் உள்ள இல்லமொன்றில் மறைத்து வைத்திருந்த நாணயத்தாள் அச்சிடும் இயந்திரத்தை இடமாற்ற முற்பட்டபோதே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட மன்று, விசாரணைகளை குற்ற விசாரணைப் பிரிவுக்கு மாற்ற அனுமதியும் வழங்கியது.

(அ-ம-26)


## வீடு வாடகைக்குத் தேவை

யாழ் நகர், கச்சேரி, நல்லூர், அரியாலை போன்ற பிரதேசங்களில் வீடு வாடகைக்கு தேவை.

076 7386 189 (CS24824)(J-1)

## பணியாளர் தேவை

எமது கைத்தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளர், திருத்துனர், பழகவிரும்புபவர்கள் தேவை.
வயது: 17 - 22 வரை (இருபாலாரும்)
மாத சம்பளம் - 30,000/-


077 199 6117 (cs 50359) (N-1)

## கணிதபாட ஆசிரியர் தேவை

தரம் 10,11 மாணவர்களுக்கு சனி, ஞாயிறு தினங்களில் குழுவாகக் கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை. தென்மராட்சியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

076 170 9100


# ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு: 04.12.1940 உதிர்வு: 11.04.2023

## அமரர் வ.இ.கதிரேசு இரத்தினசபாபதி (J.P)

(நயினாதீவு - 08)

ஓய்வுநிலை விவாகப் பதிவாளர்

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி, மீளாத்துயில் கொண்ட எம் குடும்பத் தலைவரின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (11.05.2023) வியாழக்கிழமை காலை 7.00 மணிமுதல் எமது இல்லத்தில் இடம்பெற்று, ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் முற்பகல் 11.00 மணிமுதல் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள 'சிவஹாமி மகால்' திருமண மண்டபத்தில் இடம்பெறும். இந்நிகழ்வுகளில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றோம்.

"உற்றவர் உறவிலுள்ளோர் உறுதுணையாக நின்றோர்
மற்றுவாய் மொழியில் துயரை மறந்திடத் தேறல் தந்தோர்,
இற்றைநாள் வரையாயிருந்து எமக்குர மூட்டி நின்றோர்,
அத்தனை பேர்க்கும் நன்றி நவில்கின்றோம் கரங்கள் கூப்பி."

"ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

30/6, நாவலடி லேன்,
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

(CS 24822) A-1

# 03ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 26 . 04 . 1999

மறைவு 12 . 05 . 2020

## அமரர் திரு. உதயகுமார் உதயரூபன்

மே மாதமே
நீங்கள் எங்களைப் பிரிந்தாலும்
நீங்கள் எங்களுடன் இருப்பதை நாங்கள் ஒவ்வொரு
நிமிடமும் உணருகின்றோம்
என்றும் அழியாத நினைவுகளுடன்

அப்பா, அம்மா, சகோதரங்கள், மருமக்கள்

தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவிலடி,
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

குடும்பத்தினர்.

(cs. 50363) (N-1)


## வேலையாள்கள் தேவை

நாவற்குழி நியூ ஆரியபவான் உணவகத்துக்கு வேலை ஆள்கள் தேவை.

- ரொட்டி தயாரிப்பாளர்
- தேநீர் தயாரிப்பாளர்
- உணவு பரிமாறுபவர்

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 082 8830,
074 172 2352


## பெயர் மாற்றம்

குலசேகரம் ரஜசுபாகினி ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை குலசேகரம் ராஜசுபாஜினி என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் குலசேகரம் ராஜசுபாஜினி என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு உறுதிப்படுத்துகிறேன்

தகவல்: கு.ராஜசுபாஜினி

# 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 07 . 09 . 1935

உதிர்வு 10 . 05 . 2022

யாழ். மண்டைதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

## அமரர் கணபதிப்பிள்ளை அமிர்தமணி

அவர்களின் 1ம் ஆண்டு நினைவஞ்சலி.

அம்மா எம் வாழ்கையின் கலங்கரை விளக்கே
எம்மை விட்டு பிரிந்து ஓராண்டு ஆகியுமே
எம் மனம் கணமாகவே இருக்கின்றதே அம்மா.
உங்களுடன் சேர்ந்து வாழ காலம் எனக்கு
இடமளிக்கவில்லை அம்மா.

பிரிந்த காலத்தில் ஒரு நொடியும் உம்மை
மறந்ததில்லை அம்மா.
எம்மை எப்படி பாராட்டி சீராட்டி
வளர்த்தாய் அம்மா.
எம்மை மாத்திரமா அம்மா.

யாராவது சாப்பிடாவிட்டால் உங்கள்
மனம் பொறுக்காதே.
மற்றவரை. உபசரிப்பதற்கு உங்களுக்கு
உலக சாதனை விருதே
கொடுக்கலாம் அம்மா.

அப்படி பார்த்தால் உங்கள் அளவுக்கு
நாங்கள் யாருமே இல்லையம்மா.
கவிதை எழுத பேனாவை எடுத்தால்
கண்கள் குளமாகி காகிதம்
தெரியவில்லை அம்மா.

கோடி உறவுகள் எமதருகில் இருந்தாலும்
உம்மிடத்தை ஈடுசெய்ய யாருமில்லை
அம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

குடும்பத்தினர்.

(CS 248[illegible])

# மரண அறிவித்தல்



தோற்றம் 24 . 04 . 1940

மறைவு 09 . 05 . 2023

## திருமதி சிவனேஸ்வரி பூபாலசிங்கம்

கோப்பாயை பிறப்பிடமாகவும், நுணாவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவனேஸ்வரி பூபாலசிங்கம் நேற்று (09.05.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பூபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், மகேஸ்வரி, பரிமளம், பாலசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரதாபன், மஞ்சுளாதேவி, சுகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2023) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நுணாவில் மேற்கு, சாவகச்சேரியில் உள்ள அவரது மகன் பிரதாபனின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நுணாவில் குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
077 645 4218, 074 090 3800

தகவல்: குடும்பத்தினர்.

(CR 39811) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை மெய்நுகர்வியல் இசைக்கும் திருப்புகழ்



மருத்துவர் சி.யமுனாநந்தா

சைவசித்தாந்த மெய்யறிவினை நாம் அனுபவ ரீதியான சிவத்தியானத்தில் உணரலாம். இதனை உணர்ந்த மெய்ஞானிகள் அவற்றினை அடியார்களுக்கு வாழும் நெறியாக உரைத்துள்ளனர். குருசீடப் பரம்பரையாகச் சென்ற மெய்யறிவு பின்னர் ஏடுகளிலும் நூல்களாகவும் அமைந்துள்ளன. பன்னிரு திருமுறைகளிலும் சைவசித்தாந்தசாரம் சிறப்பாகப் பொதிந்துள்ளது. பகவத்கீதை தன்னிலும் அவ்வாறே. இன்றைய விஞ்ஞான விரைவு உலகில் சைவசித்தாந்த இயற்பியல் கருத்துக்களை நவீன பௌதீக ஆய்வுகளுடன் ஒப்பிட்டு நோக்கக் கூடியதாக உள்ளது. உயிரியல், இயற்பியல், மெய்யியல் என்பன ஒருங்கிய மெய்யியல் அறிவியலாக பரிணமித்துள்ளது. அந்தவகையில் திருப்புகழில் உள்ள ஒருங்கிய மெய்யியல் அறிவியலின் ஆழம் எம்மால் அளந்திடவே முடியாது. இருந்தபோதிலும் சில மேற்கோள்கள் எமது இளம் சந்ததியினரால் சைவ மெய்யியலை பாதுகாக்க உதவும். இயற்பியலுக்குச் சமாந்தரமாக சிவஞான மெய்யறிவு விளங்குகின்றது. அதாவது இயற்கை நுகர்வியலே மெய்யியலாக விளங்குகின்றது.

நவீன இயற்பியல் அறிவில் ஒளியலைகளின் துவித நிலையான சக்திநிலையான மின்காந்த அலையாகவும், திணிசு நிலையாகவும் உள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. இவை இலத்திரன் சக்தி அலைவுகளின் நனோ தொழில்நுட்ப பிரயோகம் மூலம் கண்டறியப்பட்டன. அடுத்து திணிசுகளுக்குச் சமனானதும், எதிரானதுமான மாற்றுத் திணிசுகளின் பௌதீகத் தன்மைகளும் கண்டறியப்பட்டுள்ளன. அடுத்து பிரபஞ்சத்தில் ஈர்ப்பு அலைகளின் உருவாக்கங்களும், அவற்றின் வியாபகங்களும் கண்டறியப்பட்டுள்ளன. இவை விஞ்ஞானரீதியில் விழிநிலை தொடர்பான கருதுகோள்களுக்கு அடிப்படையாக அமைகின்றன. குறித்த அலைநீளம் உள்ள சக்தித் திணிசுகள் பிரபஞ்சம் எங்கும் வியாபிக்கும் வல்லமை வாய்ந்தவை என்ற இயற்பியல் கண்டறிவு மந்திர உச்சாடனத்தின் வல்லமையினை உறுதிப்படுத்துகின்றது.

பூமியில் உயிரின் தோற்றம் தொடர்பாக நவீன இயற்பியல் ஆதாரங்கள் சைவசித்தாந்தத்துடன் இயைந்து போவதனை உய்த்துணரக்கூடியதாக உள்ளது. மேரு மலையினைச் சிவமாகவும், ஏனைய மலைகளை முருகனாகவும் அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ், சங்கராச்சாரியார் அருளிய செந்திலாதிபன் தோத்திரம் என்பவற்றில் விபரிக்கப்பட்டுள்ளன. மலைகளிலேயே முருகன் உறைந்து அருளுதல், குன்று தோறாடும் குமரன் கதிர்காமன் என வழங்கப்படுகின்றது. முருகனின் சக்தி வேலாகக் கூறப்படுகின்றது. அதுவே சூக்குமமாக எல்லா உயிர்களையும் இயக்குகின்றது.

அருணகிரிநாதர் திருப்புகழில் குன்றுகளிலும், கோபுரத்திலும் உறைந்து அருளும் முருகன் என தெய்வீகசக்தி மலைகளிலும், கோபுரத்திலும் அமையப் பெற்றமையைப் புலப்படுத்துகின்றன. இவை இன்றைய இயற்பியல் விஞ்ஞானத்தில் பிரபஞ்ச ஈர்ப்பு அலைகள் பூமியில் எவ்வாறு உயரிய மலைகளிலும், கோபுரங்களிலும் ஒடுங்குகின்றன என்பதனை இயற்கையாகவே வாழ்வியலில் எடுத்துக் காட்டுகின்றதனை உவமிக்கலாம்.

**ஆறுமுகப் பொருளுக்கு அருணகிரிநாதர் அருளிய பாடல்,**

**‘வாறினை யடர்ந் வேல்விழியன் தங்கள்**
**மாய மொழிந்து தெளியோனே**
**மாமலர்கள் கொண்டு மாலைகள் புனைந்து**
**மாபா மணிந்து பணியேனே**

**ஆதியொரு மந்தமாகிய நலங்கள்**
**ஆறுமுக மென்று தெரியேனே**
**ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்ட**
**தாருமயிலென்ப தறியேனே**

**நாதமொடு விந்து வானவுடல் கொண்டு**
**நானில் மலைந்து திரிவேனே**
**நாகமணி கின்ற நாதனிலை கண்டு**
**நாடியதில் நின்று தொழுகேனே**

**சோதியுணா கின்ற வாழ்வு சிவமென்ற**
**சோகமது தந்து எனையாழ்வாய்**
**சூலர்குலம் வென்று வாகையொடு சென்று**
**சோலைமலை நின்ற பெருமாளே.**

**அருணகிரிநாதரின் பக்தி நிலைக்கு ஆதிசங்கரரின் விளக்கங்கள்.**

பொன்னொளி பரப்பும் கைலைமலை புங்கவானம் பேரொளிப் பிழம்பான சிவபெருமானிடம் வாழிடம். மண்ணில் வாழும் மலைகளும், குன்றுகளும் குமரன் வாழிடம் என்கின்றார். ஆதிசங்கரப் பெருமான் முருகனைப் பாடியருளிய, சுப்பிரமணிய புஜங்கம் என்ற வடமொழிச் செய்யுளின் செந்தமிழ்க் கவியாக்கத்தைப் புலவர் சுப. துளசி, செந்திலாதிபன் தோத்திரம் என அருளியுள்ளார். செந்திலாதிபன் தோத்திரத்தில் ஆறுமுகத்தின் பெருமையினைப் போற்றுவது.

**‘பொன்மேரு கைலையே புண்ணியச் சிவநாதன்**
**போற்றி வாழ் மலையாகுமே**
**நண்ணினான் மலையெலாம் நாயகிச் சிவபாலன்**
**நடராசன் போற்றி செய்வே .**

**கண்ணுதல் ஐம்முகன் ஐந்தெழுத் தட்சரன்**
**கந்தனோ ஆறுமுகனாம்**
**எண்ணரும் இருமூன்று அட்சாப் பொருளாக**
**இணைந்தனர் உயிராகவே**
**தன்னுடைத் தாதையின் ஐம்முகத் தோடுதன் .**
**தாய் முகம் தான் கொண்டனாம்**
**மன்னிய முகமாறு மாதவச் சக்திகள்**
**மான்பென உரைப்பதுண்டே .**
**எண்ணிடும் சரவண பவாவெனும் தத்துவம்**
**ஏற்றமே அளிக்கும் மந்த்ரம்**
**கண்ணனின் முகமொன்று கந்தனின் அதோமுகம்**
**கணிப்பினில் பிளையுமுளதோ ‘**

ஆறு திருமுகங்களும் ஆதிசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி, பராசக்தி, ஞானசக்தி, குடிலாசக்தி என்றும் கருதுவர். மேலும் அ, உ, ம், நாதம், விந்து, சக்தி என்பன ஆறுமுகங்கள் என்றும் ஈசன் திருமுகம் ஒன்றுடன் தேவி திருமுகம் ஒன்றும் சேர்ந்து ஆறுமுகங்கள் என்றும் விளக்குவர். ஆடுமயிலில் ஆறுமுகம் ஓங்காரத்தை அதாவது பிரணவப் பொருளை உணர்த்துகின்றது. இதுவே பிரபஞ்ச நியதி. மேலும் ஆறுதலைத்தமும் முகமாக ஆறுமுகம் விளிக்கப்படுகின்றது. மேலும் ஆறுமுகம் கங்கையினை சடையில் வைத்த சிவபெருமானின் ரூபமாகவும் விநாயகரின் ரூபமாகவும் ஆன பொருள் அமைகின்றது.

**பிறைச் செக்கர்ப் புரைக்கொத்துச் சடைப்பச்சைக் கொடிக்கிச்சைப்**
**பிறக்குற்றத் திருப்பக்கச் சிவநாதர்**
**பெருக்கப்புத் தடக்கை கற்பகத் தொப்பை’**

என அருணகிரிநாதர் விநாயகருக்கும் சிவபிரான் போல சிரசிற் சடை, கங்கை திங்கள் கொன்றை, பாம்பு, முக்கண் என ஆறும் உண்டு. இவையே ஆறுமுகமான பொருள் என அருணாசலஈசர் அருளியுள்ளார்.

---

# அன்பின் பலவீனமே வலிமை

இறைவன் உயிர்க்குலத்துக்குக் கொடுத்த ஒரே ஒரு வரம் அன்புதான். அன்பே உயிர்க்குலத்தின் வளர்ச்சிக்கு ஊற்று அன்பே உயிர்க்குலத்தின் பாதுகாப்புக் கவசம், மானிடத்தில் உயிரியல் அடிப்பண்பு விரிந்து, வளர்ந்து வாழ்வது விரிவன எல்லாம் வாழும். சுருங்குவன எல்லாம் அழியும். தன்னலம் ஆக்கம் போலத் தோன்றும். தன்னலம் இன்பம் போலத் தோன்றும். ஆனால், இதனிலும் துன்பம் மற்றொன்று இல்லை. ஆதலால் அன்புடையவராக விளங்க, காண்பவர்கள் அனைவரையும் நேசித்த பிறகு கடைசியாக நம்மை நேசித்துக் கொள்ளவேண்டும். அதுவும் வாழ்தலுக்காகவேயாம். அன்பு இல்லையேல் பிறதுறைகளில் பெற்றவை அதாவது அறிவு யோகம் முதலியன கூட பயனற்றுப் போகின்றன.

அன்பு இயற்கையாக அமைந்த ஒரு நியதி. நல் வாழ்க்கையின் வரிச்சட்டம், தாவரங்கள், விலங்குகள் இந்த அன்பு என்ற அடிப்படைச் சட்டதினின்று விலக இயலாமை ஒரு காரணமாகவும் இருக்கலாம். ஆனால், மானிடசாதி அன்பு என்ற வரிச்சட்டதினின்று விலக இயலாமை ஒரு காரணமாகவும் இருக்கலாம். ஆனால், மானிடசாதி அன்பு என்ற வரிச்சட்டத்திலிருந்து விலகிச் செல்கிறது. இது முற்றிலும் தவறு. பகுத்தறிவு நன்மையை வளர்க்கவே; தீமையை அகற்றவேயாம். மேலும், வாழ்க்கைப் போக்கை வளர்ப்பதற்கே பகுத்தறிவு. அணு ஆயுதங்களால் உலகை அழிப்பது எங்ஙனம் பகுத்தறிவு ஆகும்?

இன்று இயற்கை உலகம் விரிந்து கிடக்கிறது. மனிதன் படைத்துள்ள கருவிகள், விரிந்த உலகை இணைக்கின்றன. ஆனால், மனிதன் சுருங்குகிறான். தன் வீடு, தன் நாடு, தன் மொழி, தன் மதம் என்று சுருங்கி விடுகின்றான். அதன் காரணமாகப் போரிடும் உலகமே தோன்றியுள்ளது. கெட்ட போரிடும் உலகத்தை மாற்றி அமைத்திடுதல் வேண்டும். வீட்டுக்கும் வீட்டுக்கும் இடையே வைத்த சுவர்களை இடித்துவிடவேண்டும். வீதிகளுக்கு இடையே உள்ள திரைகளை அகற்றவேண்டும், நாட்டுக்கும் நாட்டுக்கும் இடையே உள்ள எல்லைகளை அகற்றி விடவேண்டும். இவர் தேவர் அவர் தேவர் என்று சண்டை போடும் உலகத்தை அறவே தவிர்த்திடுதல் வேண்டும். ஆன்ம நேய ஒருமைப்பாட்டைக் காணல் வேண்டும். ஒரு குலமாக வேண்டும். இதற்கு அன்பு செய்தலே வழி!

ஆதலால், வையத்தீர் அன்பு செய்வீர்!

கதிரொளி பரவுகிறது. காய்கிற கதிரொளியாக மாறுகிறது. குளிர்காய்தலுக்காக வெயிலில் படுத்திருந்த புழு, காய்கிற கதிரொளியால் சுடப்பட்டு இறந்து போகிறது; அழிந்து போகிறது; வெயிலின் வெப்பத்தை தாங்கிக் கொள்ளும் ஆற்றல் புழுக்களுக்கு இல்லை. ஏன்? எலும்பு இல்லாததால்! மனிதன், எலும்பு உள்ள மனிதன்! அதிலும் முதுகெலும்பு



மதுரா
புங்குடுதீவு

உள்ள மனிதன். வலிமையான படைப்பு. ஆயினும் ஏன்? அன்பில்லாத மனிதன் அழிவான்! அறக்கடவுள் அன்பில்லாத மனிதனைச் சுடும். வாழ்வு பாழாகும்!

இதனால் பெறப்படுவது, மானிடத்துக்கு உண்மையான வலிமை அன்பினால் மட்டுமே என்பது. அன்பில்லையேல் மானிடம் வாழ்தல் அரிது. ஆதலால் அன்பு செய்வீர்! அன்பே இந்த உலகத்தினை இன்ப உலகமாக்க உள்ள ஒரே வழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய நீர்க் கட்டமைப்புத் துறையின் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் எஸ்–லோன் நிறுவனம், இலங்கைப் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுடன் (PUCSL) புரிந்துணர்வு ஒப்பந்தம்



இலங்கையின் நீர் முகாமைத்துவ சேவை வழங்குநர்களின் முன்னோடியாக திகழும் எஸ்-லோன் தனியார் நிறுவனம், இலங்கையின் நீர் கட்டமைப்பு துறையின் (ப்ளம்பிங் தொழிற் துறை) தரத்தை முன்னேற்றும் மற்றும் நீர்க்குழாய் பொருத்துநர்களின் (ப்ளம்பர்களின்) தொழில் ரீதியான வினைத்திறனை முன்னேற்றுவதை நோக்காகக் கொண்டு, இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக் குழுவுடன் (PUCSL) புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினை ( MOU ) கைச்சாத்திட்டுள்ளது.

நவீன நீர்க்குழாய் தொழிற்துறையின் தரத்தினை ஸ்தாபித்து, அதனை மேம்படுத்துவது மற்றும் இத்தொழிற்துறையின் உயிர் நாடியாக விளங்கும் நீர்க்குழாய் பொருத்துநர்களின் தொழிற்திறனை முன்னேற்றுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு 2001 ஆண்டு ஒக்டோபர் மாதம் எஸ்-லோன் தனியார் நிறுவனம் நீர்க் குழாய் பொருத்துநர் கழகம் (SIno Plumbers' Club) எனப்படும் குழாய் பொருத்துநர்களுக்கான பிரத்தியேக அமைப்பொன்று ஸ்தாபிக்கப்பட்டது. எஸ்-லோன் தனியார் நிறுவனத்தினால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் தொழில்திறன் பயிற்சித் திட்டங்கள் மற்றும் நடைமுறை நிகழ்ச்சிகள் ஊடாக நாடளாவிய ரீதியில் பெரும்பாலான நீர்க்குழாய் பொருத்துநர்கள் பயனடைந்து வருகின்றனர். இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக நீர்க்குழாய் பொருத்துநர்களின் தொடர்ச்சியான ஆதரவை வழங்கி வரும் எஸ்லோன் தனியார் நிறுவனம், 8,000க்கும் மேற்பட்ட நீர்க்குழாய் பொருத்துநர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட வலுவான வலையமைப்பைத் தன்னகத்தே கொண்டுள்ளது. குழாய் அமைப்பு பணிகளை தொழிற்திறனுடன் முறையாக கையாளுதல், குழாய் அமைப்பை முறையாக நிறுவுதல் மற்றும் உரிய முறையிலான திருத்தப்பணிகள் தொடர்பில் நீர்க்குழாய் பொருத்துநர்களின் தொழில்நுட்ப அறிவு மற்றும் தொழில்முறை கல்வி போன்றவற்றை மேம்படுத்துவதே எஸ்-லோன் தனியார் நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்களின் முக்கியமான நோக்கங்களாகும்.

குழாய் அமைப்புகளில் காணப்படும் தொழில் முறையற்ற கையாளுகையால் சுத்தமான நீர் மற்றும் சுத்தமான காற்று மாசுபடும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அத்துடன் குழாய் அமைப்புப் பணிகளில், தொழிற்துறை அறிவின்றி மேற்கொள்ளப்படும் முறையற்ற செயற்பாடுகள், பொது மக்களின் ஆரோக்கியமான வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்கும். அதேவேளை நீர்க்குழாய் பொருத்தும் பணிகள் துறை சார்ந்த அறிவுடன் மேற்கொள்ளப்படும் போது நீர்க்குழாய் உற்பத்திப் பொருள்கள் நீண்ட ஆயுட்காலத்துடன் பாவனையாளருக்கு உரிய பயனை அளிக்கும்.

தேசிய தொழில்சார் தகுதி தரநிலை 3 (NVQ 3) இன் பயிற்சிகளை நீர்க்குழாய் பொருத்துநர்களுக்கு வழங்கி, அதனூடாக அவர்களுக்கு உரிமம் பெற்ற தொழில்நுட்ப வல்லுநர்கள் என்ற தொழில் ரீதியான அங்கீகாரத்தை உரியமுறையில் பெற்றுக்கொடுக்கத் தீர்மானித்த எஸ்-லோன் தனியார் நிறுவனம், அதற்கான வாய்ப்பை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க இலங்கைப் பொது பயன்பாட்டு ஆணைக்குழுவுடன் கைகோர்த்துள்ளது. நுவரெலியாவில் கைச்சாத்திடப்பட்ட இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க மற்றும் கெப்பிட்டல் மகாராஜா குழுமத்தின் குழுமப் பணிப்பாளர் ஃ பிரதம செயற்பாட்டு அதிகாரியான திரு. எஸ்.சி.வீரசேகர ஆகியோர் கையெழுத்திட்டனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் தனது எண்ணங்களைப் பகிர்ந்துகொண்ட கேபிட்டல் மஹாராஜா குழுமத்தின் குழுமப் பணிப்பாளர், பிரதம செயற்பாட்டு அதிகாரியான திரு. எஸ்.சி.வீரசேகர, எஸ்-லோன் நிறுவனத்தினை வளர்ச்சிப்பாதையை, வெற்றிப்பாதையாக மாற்றுவதற்காக தொடக்கத்திலிருந்தே எமக்கு உறுதுணையாக இருந்த நீர்க்குழாய் பொருத்துநர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைவதோடு உங்களின் அர்ப்பணிப்பை எண்ணி பெருமை கொள்கிறேன். இலங்கை பொதுப் பயன்பாட்டுக்காக நிறுவப்பட்ட அரச அமைப்புடன் இணைந்து மேற்கொள்ளும் இந்த செயற்றிட்ட பணிகள், நீர்க்குழாய் தொழில்நுட்ப வல்லுநர்களின் தரத்தை மேம்படுத்துவதோடு ஒட்டுமொத்த நீர்க்குழாய் தொழில் துறையின் தரத்தை உயர்த்தும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை எனத் தெரிவித்தார்.

1957 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட எஸ்-லோன் வர்த்தக நாமமானது, தேசிய கட்டுமான மற்றும் கட்டுமானப் பொருள்கள் துறையில் ஒரு நேசத்துக்குரிய அடையாளத்தை மக்கள் மத்தியில் பெற்றுக்கொண்டுள்ளது. பல்வேறுபட்ட அளவிலான குழாய்கள் மற்றும் நீர்க்குழாய் பொருத்தல் உற்பத்திகள், மழைநீர் அகற்றும் அமைப்புகள், கழிவுநீர் குழாய்கள் மற்றும் கழிவுநீர்க் குழாய் பொருத்தல் உற்பத்திகள், வெந்நீர்க் குழாய் அமைப்புகள், பலதரப்பட்ட வால்வுகள், மின் கம்பிகளுக்கான காப்புக் குழாய் மற்றும் அதற்கான பொருத்தல் உற்பத்திகள், தோட்டம் மற்றும் தெளிவான நீர் மேலாண்மை தீர்வுகளுக்கு ஏற்ற பல்வேறு உற்பத்திப் பொருள்களை எஸ்-லோன் தயாரித்து விநியோகித்து வருகின்றது. அத்துடன் பிளாஸ்டிக் குழாய்கள், தண்ணீர் குழாய்கள், சோல்வன்ட் சிமெண்ட், குரோம் பூசப்பட்ட குழாய்கள் மற்றும் அதற்கான பாகங்கள், சங்கிலி இணைப்பு வேலி, கூரைத் தகடுகள், வண்ணப்பூச்சு தூரிகைகள், பெயிண்ட் ரோலர்கள் மற்றும் தோட்டப் பணிகளுக்கு ஏற்ற உற்பத்திகளையும் எஸ்-லோன் தயாரித்து விநியோகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# 40 மாணவர்களுக்கு மேலான அனுமதி முட்டாள்தனமானது

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

கொழும்பு, மே 10

பாடசாலையில் ஒரு வகுப்பில் 40 மாணவர்களுக்கு மேல் அனுமதிப்பது என்பது முட்டாள்தனமானது. இதனை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இதுதொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது,

பாடசாலையின் ஒரு வகுப்பில் 40 மாணவர்களும் அதற்கு மேலும் மாணவர்களை அனுமதித்தல் என்னும் கல்வி அமைச்சின் முடிவானது முட்டாள்தனமானது. இதனால் கிராமப்புற பாடசாலைகள் ஆயிரக்கணக்கில் மூடப்படும். மாணவர்களும் பெற்றோரும் நகர்ப்புறம் நோக்கி படையெடுக்கும் நிலை உருவாகும். கிராமங்களின் நிலவளம், தொழில்வளம், சமய, சமூக, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் முற்றாகக் கைவிடப்படும். மாணவர்களின் நடத்தைக் கோலங்கள் மாற்றமடையும். வகுப்பறை அளவுகள் போதாமையால் உளவியல் ரீதியாக மாணவர்கள் பாதிக்கப்படுவர். ஆசிரியர்களின் பணிச்சுமை அதிகரித்து மாணவர்களைக் கண்காணித்து கற்பிக்கும் சூழ்நிலை உருவாகும். ஆசிரியத் தொழிலுக்கு இனிமேல் எவரும் உள்வாங்க முடியாத நிலை ஏற்படும். இவ்வாறான பாதகமான சூழ்நிலைகள் பல இருந்தும் அரசாங்கம் இத்தகைய முடிவை எவருடனும் கலந்தாலோசிக்காமல் எடுத்திருப்பது முட்டாள்தன மான செயற்பாடு.

இலங்கையில் இப்போதுள்ள சூழ்நிலையில் 20 மாணவர்களை வைத்துக்கொண்டே ஆசிரியர்கள் படும் அவஸ்தை சொல்லில் வடிக்க முடியாதவை. இந்த லட்சணத்தில் 40 மாணவர்களை 15 க்கு 20 அல்லது அதற்கும் குறைவான அளவுகளைக் கொண்ட வகுப்பறைகளுக்குள்ளே 6 மணிநேரம் அடைத்து வைத்துக் கல்வி புகட்டுவதால் எத்தகைய விளைவுகள் ஏற்படும் என்பதை ஒவ்வொரு ஆசிரியரும் முதலில் அறியவேண்டும். - என்றுள்ளது. (எ-14,20)

பேர்ள் கப்பல் விபத்து;

# சிங்கப்பூர் நீதிமன்றில் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, மே 10

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து சேதம் தொடர்பில் 6.4 பில்லியன் அமெரிக்க டொலர் இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கான வழக்கு சிங்கப்பூர் உயர்நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் சிங்கப்பூர் சட்ட நிறுவனம் ஒன்று இந்த வழக்கில் முன்னிலையாகியுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் கடல்சார் நிபுணத்துவம் வாய்ந்த நிபுணர்கள் ஆராய்ந்து விபத்தால் ஏற்பட்ட சேதம் தொடர்பில் 6.4 பில்லியன் அமெரிக்க டொலர் இழப்பீடாக மதிப்பிடப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் சிங்கப்பூர் நாட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. அதற்கமைய சட்டமா அதிபர் திணைக்களத்தால் அண்மையில் சிங்கப்பூர் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/கட்டுவன்புலம் மகா வித்தியாலயம்

## மணிவிழாவும், சேவைநலன் பாராட்டும்

### அதிபர்

# திருமதி வாசுகி தர்மபாலசுந்தரம்



**சேவை விபரம்**

**01. யா/அளவெட்டி தெற்கு றோ.க.த.க. பாடசாலை**

- 1990.03.26 - 2000.11.12 - **ஆசிரியர்**
- 2000.11.13 - 2010.02.02 - **பதில் அதிபர்**
- 2010.02.03 - 2013.03.19 - **அதிபர் - தரம் 2**

**02 . யா/கட்டுவன்புலம் மகா வித்தியாலயம்**

- 2013.03.20 - 2016.05.04 - **தரம் - 2 அதிபர்**
- 2016.05.05 - 2023.05.10 - **தரம் - 1 அதிபர்**




## தெல்லிப்பளைக் கோட்டக் கல்வி அதிகாரியின் வாழ்த்துச் செய்தி

"பெருமை யுடையவர் ஆற்றுவார்
ஆற்றின் அருமை உடைய செயல்:

1990களில் ஆசிரியராகத் தனது சேவையைத் தொடங்கி ஆசிரியராக யா/ அளவெட்டி தெற்கு றோ.க.த.க பாடசாலையில் கடமையேற்று அதே பாடசாலையில் பிரதி அதிபராகவும் முதலாவது அதிபர் நியமனத்தையும் பெற்று பின் 2013.03.20 இல் வடமாகாணத்தின் வடக்கு பிரதேசத்தின் கட்டுவன் எனும் கிராமத்தில் சிறு விதையாக காணப்பட்ட யா / கட்டுவன்புலம் மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையேற்றுப் பாடசாலையை விருட்சமாக விளங்க வைத்துத் தனது பணியைச் சிறப்பாகவும் திறம்படவும் செயலாற்றிய இவரை 'எத்தனை நெருக்கடி வந்தாலும் பிறர் செய்வதற்கரிய செயல்களை உரிய வழிகளில் செய்து முடிப்பவர் பெருமை யுடையவர்' என வாழ்த்தி நிற்கிறேன்.

**திரு.வே.அரசகேசரி**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர்**
**கோட்டக் கல்வி அலுவலகம், தெல்லிப்பளை.**

## வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யா/ கட்டுவன்புலம் மகா வித்தியாலய அதிபர் திருமதி வாசுகி தர்மபாலசுந்தரம் அவர்களுக்கு மணிவிழா நடைபெறவுள்ளதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன. அவர் யா/ அளவெட்டி தெற்கு றோ.க.த.க பாடசாலையில் ஆசிரியராக இருந்த காலத்திலிருந்தே அவரை நான் அறிவேன். அப்பாடசாலையில் அவர் பதிலதிகபராகவும். அதிபராகவும் இருபது வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றியுள்ளார். அவரது காலத்தில் யா/ அளவெட்டி தெற்கு றோ.க.த.க. பாடசாலை அடைந்த வளர்ச்சியை நான் அறிவேன்.

அவரது அர்ப்பணிப்பான சேவைக்கு மகுடம் சூடிய பாடசாலை கட்டுவன்புலம் பாடசாலை என்றே நான் கருதுகின்றேன். மிகவும் பின்தங்கிய ஒரு கிராமப்புறத்தில் அமைந்துள்ள இப்பாடசாலை மாணவர் எண்ணிக்கையில் மட்டுமன்றி பரீட்சைப் பெறுபேறுகளிலும் தனது வளர்ச்சியைப் படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது. இப்பாடசாலையின் சுற்றாடலில் வலிகாமத்தின் புகழ்பெற்ற இரண்டு 1 AB பாடசாலைகள் IC பாடசாலைகள் உள்ள சூழலில் அப்பாடசாலைகளில் மாணவர்கள் கவரப்படுவதைத் தடுத்துக்கொண்டு செயற்படுவது என்பது எவ்வளவு சிரமமானது என்பதை நான் புரிந்துகொள்கின்றேன்.

இத்தகைய சிறந்த பணிகள் மூலம் வலிகாமத்தின் சிறந்த பெறுபேறுகளைத் தருகின்ற பாடசாலைகளில் ஒன்றாகத் தனது பாடசாலையை உருவாக்கிய அதிபர் திருமதி வாசுகி தர்மபாலசுந்தரம் அவர்களின் ஓய்வு காலம் மகிழ்ச்சிகரமாக அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**பொ. ரவிச்சந்திரன்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம்.**

## வாழ்த்துப் பாமாலை

தேசிலு மினிது வந்து
தேற்றிடு முள்ளத் துடனே.
பாசியா யிலங்கி நின்று
பகர்ந்திடு மினிய தவ்வை.
மாசியாய் நிலம டுக்கும்
மழையதைப் போல வந்து.
ஆசியோ டனைத்து மேக
அன்பினை யருளு மவ்வை.

கற்றதா மளவை யூரில்
கலதிகள் யாவு மெள்ளி.
உற்றுணர்ந் துழையு மாகி
உலவின ளாங்கு துள்ளி.
மற்றவ ருளத்தை நாடி
மனமுவந் தேத்தி யுள்ளி.
வற்றிடா வன்பு கொண்டு
வழங்கிடு மமுத வள்ளி.

பணியிலா சிரிய ராகிப்
படிகளைத் தாண்டி யன்று.
துணிவுட னதிப ராகித்
துங்கமு மொன்ற வின்று.
பணியதி லுயர்ச்சி கண்டு
பாரினில் சிறந்து நின்று.
கணியதை யொத்தி ருந்தீர்
தடைகளை நீரும் வென்று.

அடர்வன மோடு நல்ல
அதியுயர்க் கூடங் கண்டு.
திடமுடன் சேவை யாற்றித்
திறனனு பவங்க ளுண்டு.
படபடப் பின்றி நாளும்
பாடுக ளேற்றுக் கொண்டு.
புடமுட னுலவும் நீங்கள்
புக(ழு)லுதற் கேற்ற வண்டு.

குலவிடுங் குடும்பத் தோடு
குறைபல நீங்கி நாளும்.
விலகிடா வன்பி னோடு
விரும்பிநீர் யாவு மேற்றுப்.
பலவகைச் செல்வத் தோடு
பாரினில் வாழ வேண்டி.
நலமுற வாழ்த்து கின்றோம்
வளத்துடன் வாழி! வாழி!.

**பாடசாலை சமூகம்**

Congratulations

**பாடசாலைச் சமூகம்**
**யா/ கட்டுவன்புலம்**
**மகா வித்தியாலயம்**

(cs 50303) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னாலை சேர் கனகசபை அ.த.க.பாடசாலையின்

உப அதிபர்

திருமதி கோசலாதேவி சிவநேசன்

அவர்களின்

# மணிவிழா வாழ்த்து



1993.11.01 தொடக்கம் கல்விச்சேவையில் இணைந்து 2023.05.10 இன்று ஓய்வுபெறும் எமது உபஅதிபரை வாழ்த்துவதில் பெருமை கொள்கின்றோம்.

சேவைக் காலம்

- 1993.01.11 - 1995.12.31 யா/ மல்லாகம் மகா வித்தியாலயம்
- 1996.01.01 - 1997.02.13 கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலயம்
- 1997.02.14 - 1998.08.28 மு/ முத்துஐயன்கட்டு வலதுகரை அ.த.க.பாடசாலை
- 1998.08.29 - 2005.12.31 யா/ மல்லாகம் மகா வித்தியாலயம்
- 2006.01.01 - 2013.05.14 யா/ சீனன்கலட்டி ஞானோதயா வித்தியாலயம்
- 2013.05.15 - 2023.05.10 யா/ பன்னாலை சேர் கனகசபை அ.த.க. பாடசாலை

வாழ்த்துவோர்:

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்

யா/பன்னாலை சேர் கனகசபை அ.த.க.பாடசாலை

(CS.24812)(N-1)



## புதிய பிளாஸ்ரிக் போத்தல் விற்பனைக்கு

எம்மிடம் 1000ml, 750ml, 500ml, 325ml, 200ml, 100ml, 50ml, 28ml புதிய பிளாஸ்ரிக் போத்தல்கள் விற்பனைக்கு உண்டு. (மொத்தமாக வாங்குபவர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்)

குறிப்பு:- நல்லெண்ணெய், நெல்லிக் கிரஷ், பனங்களி உற்பத்தியாளருக்கு ஏற்ற பிளாஸ்ரிக் போத்தல்களும் எம்மிடம் உண்டு.

தொடர்பு:- சிவா நறுமணப் பூங்கா

இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

021 222 2567

(சத்திரத்துச் சந்திக்கு அருகாமையில்)

(CR39802)AH-1



## இரணைப்பாலை புனித பற்றிமா அன்னையினுடைய திருவிழாவும் விளையாட்டு மற்றும் இசை நிகழ்வும்

இரணைப்பாலை புனித பற்றிமா அன்னையினுடைய திருவிழாவினை சிறப்பிக்கும் விதமாக

சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தினரால் வருடம்தோறும் நடத்தப்பட்டு வருகின்ற விளையாட்டு மற்றும் இசை நிகழ்வுகள் - (13.05.2023)

- திருவிழா திருப்பலி : காலை 7.00 மணி
- துவிச்சக்கர வண்டி ஓட்டம் : காலை 9.00 மணி
  - 1st - 50,000 /-
  - 2nd - 30,000 /-
  - 3rd - 15,000 /-
  - ஆறுதல் பரிசில்கள்
- மரதன் ஓட்டம் - காலை 9.00 மணி
  - (15 வயதிற்கு மேற்பட்டோர்)
  - (15 வயதிற்கு கீழ்பட்டோர்)
- மாலைநேர மைதான விளையாட்டுக்கள் (மாலை 3.00 மணி)
- இசை நிழ்வுகள் (மாலை 7.00 மணி)

இவ் விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்ற விரும்பும் வீரர்கள் கீழ்காணும்தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொள்ளவும்.

சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம்

தொடர்புகளுக்கு: 077 240 3966/ 077 481 4005


## உலோலைசிட்டி விநாயகருக்கு கொடியேற்றம்

அராலிமத்தி உலோலைசிட்டி அருள்மிகு சித்திவிநாயகர் தேவஸ்தான சோபகிருதுவருஷமஹோற்சவப் பெருவிழா இன்று புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிதொடர்ந்து இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை வேட்டைத்திருவிழாவும், மறுநாள் 17ஆம் திகதி புதன்கிழமை சப்பறத் திருவிழாவும், 18ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து மு.ப. 11 மணியளவில் தேர்த் திருவிழாவும், 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை தீர்த்தோற்சவமும் அன்று மாலைகொடியிறக்கமும் இடம்பெறும் என்று ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (அ-ம)


# இரணைதீவு, இரணை மாதா நகரில் புதிதாக அமைக்கப்பட்ட புனித செபமாலை மாதா ஆலய திறப்புவிழா

இன்று (2023.05.10) புதன்கிழமை காலை: 8.30 மணிக்கு

யாழ் மறை மாவட்ட ஆயர் அருட்கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அவர்களால் அபிஷேகம் செய்து கோலாகலமாக திறந்து வைக்கப்படும் சிறப்பிதழ்

## யாழ். மறை மாவட்ட ஆயரின் ஆசிச்செய்தி



இரணைமாதாநகர் புனித செபமாலை மாதா புதிய ஆலய திறப்பு விழாவை முன்னிட்டு வெளியிடப்படுகின்ற சிறப்பு மலருக்கு ஆசியுரை வழங்குவதை முன்னிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த புதிய ஆலயத்தின் கட்டிட பணியை நிறைவு செய்ய பாடுபட்டு உழைத்த குருக்கள். துறவிகள். பங்கு மக்கள் அனைவருக்கும் எனது நன்றிகளையும். வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இரணைமாநகர் பழைமை வாய்ந்த. தொன்மையான பாரம்பரியங்களுடன். கத்தோலிக்க திருமறையினை பின்பற்றுகின்ற. ஒரு கத்தோலிக்க கிராமம் ஆகும். புனித செபமாலை அன்னை ஆலயமானது இரணை தீவின் பிரதான ஆலயமாக இருந்து வந்திருக்கின்றது. காலத்தின் நியதியால் கணத்த இதயத்தோடு. கண்ணீர் மல்க. 1992 இல் தம் முன்னோர் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த தம் சொந்த மண்ணை விட்டுவிட்டு முழங்காவில் பகுதியில் புதிய குடியேற்ற கிராமமாகிய இரணைமாதா நகரில் குடியமர்த்தப்பட்டார்கள். இல்லிடம் மாற்றம் அடைந்தாலும் அன்னையின் பிரசன்னம் எப்போதும் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தமது கிராமத்தில் செபமாலை அன்னைக்கு ஒரு ஆலயத்தை அதே ஆண்டிலேயே தற்போதய திருக்குடும்ப கன்னியர்மட காணியில் முதல் முறையாக அமைத்தார்கள். 1996 இல் தற்போதைய ஆலய காணியில் இடப்புற பாலை மரத்தடியில் இரண்டாவது முறையாக ஆலயம் அமைத்தார்கள். பின்பு 2003 ம் ஆண்டில் தற்போதைய புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு இன்று கிட்ட தட்ட இருபது வருட நிறைவில் பலரது அயராத உழைப்பினால் இந்த அழகான. பிரமாண்டாமான ஆலயம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

இன்று எமது மறை மாவட்டத்தில் பல ஆலயங்கள் புதிதாக அமைக்கப்படுவதுடன் புனரமைப்புப் பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன. பெரும்பாலான பங்குகளில் புலம்பெயர் நாடுகளில் வாழும் எம் உறவுகளின் பங்களிப்பு இன்றி இத்தகையை வேலைகளை முன்னெடுப்பது என்பது சாத்தியமற்ற ஒரு விடயமாக இருக்கின்றது. ஆனால் இந்த பிரமாண்டமான ஆலயத்தின் பெரும்பாலான பகுதி யினை உள்ளூர் மக்களின் கடின உழைப்பாலும். உதவியாலும். செய்து முடித்திருப்பது பாராட்டபட வேண்டிய ஒரு விடயமாகும்.

எனவே. இந்த பிரமாண்டமான புதிய ஆலயத்தை கட்டிமுடிக்க உழைத்த பங்கு தந்தையர்கள். அருட்சகோதரிகள். பங்கு மக்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதோடு. இறை ஆசீரையும் வழங்கி நிற்கின்றேன். உங்கள் முயற்சிகள் தொடரவும். உங்கள் ஆக்க பூர்வமான செயற்பாடுகள் வெற்றிபெறவும். ஒற்றுமையாக உழைக்கின்ற பங்கு திரு அவையாக மென்மேலும் வளர்ச்சி பெறவும் வாழ்த்தி நிற்கின்றேன்.

அருட்கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்

யாழ்.ஆயர்.



## ஆலய வலாற்றுச் சுருக்கம்

இரணைதீவு மிகவும் பழமை வாய்ந்த தொன்மையான பாரம்பரியங்களுடன் கூடிய முழுமையான கத்தோலிக்க கிராமமாகும்.கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்குபகுதியில் பூநகரி பிரதேசசெயலகத்திற்குட்பட்ட மிகப்பழமையான ஒரு கிராமமாகும். இம் மக்களின் வரலாறு மிகவும் தொன்மையானது. வெள்ளைக்காரக் குருக்களாலும் அமலமரி தியாகிகள் சபைக் குருக்களாலும். சுதேச குருக்களாலும். திருக்குடும்பக் கன்னியர் சபை அருட்சகோதரிகளாலும் இறை விசுவாசத்திலும் ஒழுக்கவிழுமியங்களாலும் பங்குவழி நடத்தப்பட்டது.இங்கு காணப்பட்ட கல்விமுறைகளானது ஆரம்பத்தில் திண்ணைப் பாடசாலையாகவும் மிசனரிப் பாடசாலையாகவும் பின்பு அரச பாடசாலையாகவும் கல்விச் செயற்பாடுகள் நடைபெற்று வந்தன. இரணைதீவில் பிரதான ஆலயமாக புனித செபமாலை மாதா ஆலயமும் சிற்றாலயங்களாக புனித செபஸ்ரியார் ஆலயம் (சிறுத்தீவு).புனித அந்தோனியார் ஆலயம்.புனித வேளாங்கன்னி ஆலயம். புனித லூர்த்துகெபி ஆலயம் என்பன அமைந்துள்ளன. இரணைதீவில் ஒல்லாந்தர் காலத்திற்குட்பட்ட 80 அடி உயரமான கலங்கரைவிளக்கம் ஒன்று உள்ளது. இரணைதீவில் ஆங்கிலேயர் கால நிலக் கீழ் மழை நீர் சேகரிப்பு மழை நீர்தொட்டி ஒன்று ஆலய நிலக் கீழ் தரையில் அமைந்துள்ளது. பழைமையும் எழிலும் கொண்டமைந்த மிகப் பெரிய இரண்டு மணிக் கோபுரங்கள். சுண்ணாம்பும் சீமெந்தும் கொண்டு கட்டுவிக்கப்பட்ட மிகப்பெரிய ஆலயம் ஒன்றும் உள்ளது. 10.08.1992 இல் இரணைதீவில் இருந்து இடம்பெயர்ந்து இரணைமாதா நகரில் குடியிருப்புக்கள் உருவாக்கப்பட்டது. 1992 இல் குடியமர்ந்த பின்னர் அவ்வாண்டே தற்போதைய திருக்குடும்பக் கன்னியர் மடக் காணியில் முதலாவது ஆலயமும் 1996 இல் தற்போதய ஆலயக் காணியில் இடப்புற பாலைமரத்தடியில் இரண்டாவது ஆலயமும் 2000 ஆம் ஆண்டு தண்டவாளங்களுடன் கூடிய சிற்றாலயமும் காணப்பட்டன. 2003 ஆம் ஆண்டு முன்னாள் பங்குத் தந்தை அருட்திரு ஜேம்ஸ் அடிகளார் தலைமையில் தற்போதய ஓய்வுநிலை ஆயர் அதி வணக்கத்துக்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. இவ்வாலயம் பூரணமாக சொந்த மக்களின் கடின உழைப்பாலும் உதவியாலும் இரணைமாதாநகரில் பிரமாண்டமான ஆலயமாக ஊரின் மத்தியில் உயர்ந்து எழுந்து நிற்பது பங்கு மக்களின் விசுவாசத்தின் வெளிப்பாடகும்.

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



வன்னி மண்ணின் புகழ்பூத்த கிளி. மாநகரின் பூநகரி பிரதேச செயலகர் பிரிவு பலநூறு ஆண்டுகள் வரலாறு கொண்ட தமிழ் மணக்கும் பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் எழுப்பப்பட்டுள்ள பல ஆலயங்கள் தொன்மையான. பிரசித்திபெற்றவையாகும். அவ்வாறே இரணைமாதாநகர் எனும் பதியினில் கோவில்கொண்டு எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்வழங்கும் தூய செபமாலை அன்னையின் ஆலயமானது 1992 இடப்பெயர்வின் பின் உருவாக்கப்பட்டதாயினும் கத்தோலிக்க கிராமமான இரணைதீவிலிருந்து இடம்பெயர்ந்து இக்குடியிருப்பில் வாழும் மக்களின் விசுவாசம் போர்த்துக்கேயர். ஒல்லாந்தர். ஆங்கிலேயர் காலத்திலிருந்து கட்டியெழுப்பப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

மேலைநாடுகளிலிருந்து வருகைதந்த கத்தோலிக்க குருக்களாலும். அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த குருக்கள். சுதேச குருக்கள் மற்றும் திருக்குடும்ப கன்னியர்சபை அருட்சகோதரிகளின் பணிகளாலும் ஆன்மிகம் அடித்தளமிடப்பட்டது. இம்மக்களின் கல்வி வளர்ச்சியானது திண்ணைப் பாடசாலை முறையிலிருந்து மிஷனரிப் பாடசாலையாக வளர்ந்து அரச பாடசாலைக் கல்வி முறையில் பரிணாமம் பெற்றுள்ளது. 2003 ஆம் ஆண்டில் அடித்தளமிடப்பட்டு. இடப் பெயர்வுகள் இழப்புக்களைக் கடந்து பத்தொன்பது ஆண்டுகள் அரும் முயற்சியில் இன்று திறப்புவிழாக்காணும் இவ் ஆலயத்தை நிர்மாணிப்பதில் உழைத்த ஆயர்கள். குருக்கள். பங்குமக்கள் அனைவரினதும் காத்திரமான பணிகளும் பாராட்டத்தக்கவை. கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் நிதிப் பங்களிப்பும் சிறுதுளியாக இவ் ஆலய நிர்மாணிப்பில் கலந்துள்ளமை மாவட்டச் செயலகமாக எமக்கும் பெருமையளிக்கும் விடயமாகும்.

ஆலயமில்லா ஊரில் குடியிருத்தலாகாது என்ற முதியோர் வாக்கிற்கிணங்க அழகுற அமைக்கப்பட்டுள்ள இவ்வாலயம் அதன் ஆன்மிகப் பணிகளை நிறைவுசெய்வதாக அமையும். அதற்காக உழைத்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் இறையாசி கிடைக்கவும். ஆலயத்தை அண்டி வாழும் மக்களின் வாழ்வு. தொழில் துறைகள். கல்வி நிலைகள் உயர்வடையவும் உளமார வாழ்த்துகின்றேன்.

திருமதி றூபவதி கேதீஸ்வரன்

அரசாங்க அதிபர் /

மாவட்ட செயலாளர் மாவட்ட செயலகம், கிளிநொச்சி.

பங்குத்தந்தை,

அருட் சகோதரிகள்,

பங்கு மக்கள்.

(cs.50350)(N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்
### வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி

❖ **மூன்றாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2021**

மேற்படி பரீட்சைகளினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் யூலை மாதமளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்திலோ அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி 26.05.2023 (வெள்ளிக்கிழமை) ஆகும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களினை திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) சமர்ப்பிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்த் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

உதவிப் பதிவாளர்,
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-222-3612 என்ற தொலை பேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**09.05.2023** (CR 39810) (K-1) **பதிவாளர்**

## யாழ் போதனா வைத்தியசாலையிலுள்ள பிரதான சிற்றுண்டிச்சாலை மற்றும் பல்பொருள் விற்பனை நிலையம் ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்
## 01.06.2023 தொடக்கம் 31.05.2024 வரை

யாழ் போதனாவைத்தியசாலையின் பிராந்திய பெறுகைகள் குழுத் தலைவர் தகுதியான / தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடாத்துனர்களிடமிருந்து 01.06.2023 தொடக்கம் 31.05.2024 வரையான காலப்பகுதிக்கு யாழ் போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையினை நடாத்துவதற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

01. வைத்தியசாலை பகுதியில் உள்ள பின்வரும் விற்பனை நிலையங்களை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்
    1. பிரதான சிற்றுண்டிச்சாலை
    2. பல்பொருள் விற்பனை நிலையம் (Food City)
02. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் இவ் வைத்தியசாலையில் கிடைக்கும் 'கேள்வி கோரும் ஆவணங்களைப் பெறுவதற்கான விண்ணப்பம்' என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 2000/= காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 10.05.2023 தொடக்கம் 22.05.2023 வரையான காலப்பகுதியில் (மு.ப) 09.00 மணி தொடக்கம் (பி.ப) 03.00 மணிவரை (பி.ப 12.30 தொடக்கம் பி.ப 01.00 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
03. கேள்வி தொடர்பான முன்னோடிக் கூட்டம் 16.05.2023 ம் திகதி காலை 10.00 மணிக்கு அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.
04. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படக்கூடிய வைப்புக் கட்டணமாக (Bid Bond) ரூபா 50,000/= ஐ அலுவலகத்தில் செலுத்தி அதனுடைய பற்றுச்சீட்டின் மூலப்பிரதியையும் கேள்வி விண்ணப் பத்துடன் இணைத்தல் வேண்டும்.
05. விண்ணப்பப்படிவங்களை பெற வரும் போது தங்களால் நடாத்துகின்ற உணவகத்திற்குரிய வியாபார பெயர்ப்பதிவுச் சான்றிதழின் (Business Registration) பிரதியையும். குறித்த உள்ளூராட்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட வியாபார அனுமதிப்பத்திரத்தின் பிரதியினையும். மற்றும் சுகாதாரப்பகுதியினால் வழங்கப்பட்ட "A" அல்லது "B" தரச் சான்றிதழின் பிரதியையோ அல்லது அதனை உறுதிப்படுத்தக் கூடிய ஏனைய சான்றிதழின் பிரதியையோ சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
06. விலைக் கேள்விகள் கடித உறையின் மேல் பகுதியில் சிற்றுண்டிச்சாலையின் பெயரினைக் குறிப்பிட்டு 23.05.2023 திகதி (பி.ப) 10.00 மணிக்கு முன்பதாக இப் போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக் கேள்வி யாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
07. சமைத்த உணவுகளை வழங்குவதற்காக தங்களால் பயன்படுத்தப்படும் சமையற் கூடமானது வைத்தியசாலையிலிருந்து 10 கி.மீ உட்பட்டிருப்பதுடன் உரிய தகுதி விதிகளைப் பூர்த்தி செய்துள்ளதா என்பது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் நேரடி பரிசோதனை மூலம் மதிப்பீடு செய்யப்படும்.
08. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக் கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில் / தொலைபேசி இலக்கத்துடன் 021-2223141 தொடர்பை ஏற்படுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
09. கிடைக்கப் பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒருபகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பிராந்திய பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.
10. மேற்படி வைத்தியசாலையின் சிற்றுண்டி உணவகத்தை நடாத்த விண்ணப்பம் செய்யும் எவரும் வைத்தியசாலையினால் உறுதிப்படுத்தும் தரத்திலும் அளவுகளிலும் உணவுப் பண்டங்களை வழங்குவதுடன் ஒப்பந்தகாலப்பகுதியில் இடையறாத சேவையினை வழங்க வேண்டும்.

**தலைவர்/**
**பிராந்திய பெறுகைக்குழு**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்,**

(CR/39806)AH-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**தோற்றம்** 22 - 01 - 1928



**மறைவு** 10 • 05 • 2022

### திரு. கதிர்காமு வெற்றிவேலு
**(ஓய்வுபெற்ற நிதி உதவியாளர் - யாழ்.கல்வித்திணைக்களம்)**

நல்ல போராட்டத்தைப் போராடினேன் ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்.
2 தீ மோத்தேயு 4:7

கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் திரு. கதிர்காமு வெற்றிவேலு அவர்களின் முதலாம் ஆண்டு நன்றி செலுத்தும் ஆராதனை இன்று (10.05.2023) புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்வில் தங்களையும் குடும்ப சமேதரராய் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**"இரத்தினவாசம்"**
**இலுப்பையடி வீதி, மட்டுவில் தெற்கு,**
**சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்.**
**021 227 1194,**
**077 612 5983**

(CR/39807)AH-1

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 23 • 02 • 1946



**மறைவு** 03 • 05 • 2023

### பாலசரஸ்வதி கணேசலிங்கம்

சுழிபுரம் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசரஸ்வதி கணேசலிங்கம் கடந்த (03.05.2023) புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா கணேசலிங்கம் (முன்னாள் சிரேஷ்ட திட்டமிடல் பணிப்பாளர் - Care Intenational / Formaly With Forut) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாவுக்கரசு பெரியதம்பி மாதுராதேவி தம்பதியரின் சிரேஷ்ட மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு கந்தையா தங்கம் தம்பதியரின் (இளவாலை) அன்பு மருகமளும், காலஞ்சென்ற ஜெயதேவன் மற்றும் ஜீவகன், விஜயலக்ஷ்மி, ஜெயலக்ஷ்மி, ராஜலக்ஷ்மி, நாவுக்கரசு ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், மகேந்திரலிங்கம், முத்துக்குமாரலிங்கம், சுதிராகமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கலைவாணி, ஆனந்தகுமார், சிறீவாணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், நகுலேஸ்வரன், இளங்கோவன், சாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், நிலுக்ஷன், இந்துஜன், நிசானி,ஜீவகன், மாதவன், அபினயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.05.2023) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு சுழிபுரம் மத்தியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நந்தவனம்**
**தேனியன் தோட்டம் வீதி,**
**சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.**

**தகவல்:**
**கனகரட்ணம் ஜெகஜீவகன்**
**(பேறாமகன்)**

(cs50358 (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் ஒருவர் பலி!



கிளிநொச்சி, மே 10

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். தவராசா சாருஜன் (வயது - 18) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

விபத்து இடம்பெற்ற இடத்தில் இரு கால்நடைகளும் இறந்து கிடந்துள்ளன. ஆதலால், கால்நடைகளுடன் மோதுண்டதால் இந்த விபத்து சம்பவித்திருக்கலாம் என்று பொலிஸார் தமது முதற்கட்ட விசாரணையின் அடிப்படை யில் தெரிவித்துள்ளனர்.

சடலம் கிளிநொச்சி மருத்துவமனையில் பாரப்படுத்தப்பட்டுள்ளது. (அ-ம-113)

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், மே 10

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் நினைவாக நல்லூரில் குருதிக்கொடை முகாமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபன் நினைவிடத்துக்கு அருகில் இந்தக் குருதிக்கொடை முகாம் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ-ம-66)

## தொல்...

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மைக் காலங்களில் இலங்கைத் தொல்பொருள் திணைக்களத்தால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் 37 இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள இன, மத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் குறித்து இந்த நாடாளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன்.

தமிழர் தாயகத்தின் இதயபூமியான முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாறு ஆரம்பிக்கும் பிரதேசமான பழைய செம்மலைப் பகுதியில், காலாகாலமாக இருந்துவரும் இந்துக்களின் ஆலயமான பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தை அபகரித்து அங்கு பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

வவுனியா - வெடுக்குநாறிமலை, சுமார் 3 ஆயிரம் ஆண்டுகால பழமையையும், வரலாற்றுச் சிறப்புக்களையும் கொண்டமைந்துள்ளது. 300 மீற்றர் உயரமான வெடுக்குநாறிமலை அடிவாரத்தின் கீழ் தமிழ் பிராமிய கல்வெட்டுக்கள் மற்றும் வட்டெழுத்துக்கள் போன்றவற்றைக் காணமுடியும். இம்மலையின் உச்சியில் ஆதிலிங்கேஸ்வரர் எனும் சிவனுடைய புராதன ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தில் இந்துக்கள் வழிபடுவதைத் தடுக்கவும் கையகப்படுத்தவும் தொல்பொருள் திணைக்களம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

முல்லைத்தீவு, குருந்தூர் மலையில் ஆதி ஐயனாரின் ஆலயத்தை பௌத்த பிக்குகள் உரிமைகோரியதை அடுத்து, அந்தப் பகுதியை பௌத்த மயமாக்கி விடுவதற்கு தொல்பொருள் திணைக்களம் கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இவற்றைவிட, உருத்திரபுர நாயகி உடனுறை உருத்திரபுரீஸ்வரர் சிவாலயம், கிளிநொச்சி மாவட்டம், பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள கௌதாரி முனை, மண்ணித்தலை சிவன் ஆலயம், கிளிநொச்சி - கிருஷ்ணபுரம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பிள்ளையார் ஆலயம், யாழ்ப்பாணம் - நிலாவரைக் கிணறு, யாழ்ப்பாணம் கீரிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் சடையம்மா மடம், மயிலிட்டி வரசித்தி விநாயகர் ஆலயம் மற்றும் சென். மேரி தேவாலயம், நெடுந்தீவு வெடியரசன் கோட்டை, நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயம், யாழ்ப்பாணம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு அருகிலுள்ள இந்து ஆலயம், திருகோணமலை திருக்கோணேஸ்வரம், திருகோணமலை கன்னியாய் வெந்நீரூற்று, திருகோணமலை சாம்பல்தீவு சல்லிச்சந்தி, திருகோணமலை கங்குவேலி சிவன் ஆலயம், திருகோணமலை கங்குவேலி பத்தினி அம்மன்கோவில், திருகோணமலை கல்லடி மலைநீலி அம்மன் ஆலயம், இலங்கை முகத்துவாரம் பெரியசாமி ஆலயம், மூதூர் மலையடிப் பிள்ளையார் ஆலயம், திருகோணமலை நகர்ப்பகுதியிலுள்ள புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை புல்மோட்டை அரிசிமலை, திருகோணமலை பேருந்து நிலையம், திருகோணமலை சேருவில் திருமங்களாய் சிவன் ஆலயம், தென்னமரவடி கந்தசாமிமலை முருகன் கோவில், திருகோணமலை திரியாய் பகுதி, திருகோணமலை குச்சவெளிப் பகுதி, திருகோணமலை திரியாய் நாகதம்பிரான் கோவில், திருகோணமலை செம்பிமலை சிவன் கோவில், திருகோணமலை இருதயபுரம் விநாயகர்கோவில், திருகோணமலை மூதூர் கூனித்தீவு முருகன்கோவில், மட்டக்களப்பு மயிலத்தமடு மற்றும் மாதவனை மேய்ச்சல்தரை, அம்பாறை உகந்தமலை முருகன் ஆலயம், கச்சதீவு, யாழ்ப்பாணம், நாவற்குழி, யாழ்ப்பாணம் தையிட்டி (திஸ்ஸ விகாரை) உள்ளிட்ட பகுதிகளே தொல்பொருள் திணைக்களத்தின் பிடிக்கு இரையாகியுள்ளன. இவற்றில் பௌத்த ஆக்கிரமிப்புக்களும் விகாரை அமைப்புக்களும் திட்டமிட்ட வகையில் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே, வடக்கு - கிழக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீக நிலங்களை அதிகாரக் கரங்களால் வலிந்து பறித்தெடுத்து, அந்நிலங்களில் பௌத்த விகாரைகள் அமைத்தல், இராணுவ முகாம்களை கட்டமைத்தல், சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குதல், சீனா உள்ளிட்ட நாடுகளின் வர்த்தக நடவடிக்கைகளுக்காக அவற்றை வழங்குதல் என்பவற்றின் ஊடாக, தமிழ் மக்களின் குடிப்பரம்பலை அடியோடு அழிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்தும் முன்னெடுப்பதை சிங்கள இனவாத அரசு உடனடியாக நிறுத்தவேண்டும் - என்றார். (அ-ம)

## கிழக்கு...

வடக்கு அபிவிருத்தி தொடர்பான விடயத்தையும் ஒத்திவைப்பதாகவும் ஜனாதிபதி ரணில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் தமிழ் அரசுக் கட்சி சார்பில் இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன், சாள்ஸ்நிர்மலநாதன், த.கலையரசன், இரா.சாணக்கியன் மற்றும் அந்தக் கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

சந்திப்பின் ஆரம்பத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நேற்றுமுன்தினம் எடுத்த தீர்மானத்தின் அடிப்படையில் பேச்சைத் தொடங்கியது. வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்ற கருத்தியலுக்கு அமைவாகவே தமது பேச்சுக்கள் இருக்கும் என்பதை எடுத்துரைத்தனர். நாளை, நாளை மறுதினம், அதற்கு மறுநாள் என்று 3 நாள் பேச்சுக்களில் வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்தமை தொடர்பில் ஆட்சேபம் எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, கிழக்கு மாகாணத்தைப் புறக்கணிக்கவில்லை என்றும் முதலில் வடக்கு மாகாணம் தொடர்பில் பேசிவிட்டு பின்னர் கிழக்கு மாகாணத்துடன் அதேபோன்றதொரு தனியான சந்திப்பை நடத்த திட்டமிட்டிருந்ததாகக் குறிப்பிட்டார். அதிகாரப் பகிர்வு மற்றும் நடைமுறைப் பிரச்சினைகள் தொடர்பில் வடக்கு - கிழக்கு என்று பிரித்துப் பேசமுடியாது என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சுட்டிக்காட்டியது. அதனை ஜனாதிபதி ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

அதற்கு அமைவாக கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்து நாளை பொதுப்பிரச்சினைகள் தொடர்பாகவும் குறிப்பாக தொல்பொருள் திணைக்களம் மற்றும் காணி அபகரிப்புத் தொடர்பிலும் மறுநாள் 12ஆம் திகதி அதிகாரப் பகிர்வு தொடர்பிலும் பேச இணக்கம் காணப்பட்டது. கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பில் திட்டவரைவு தயாரில்லாததால் வடக்கு அபிவிருத்தி தொடர்பில் 13ஆம் திகதி பேசுவதில்லை என்றும் கிழக்கு அபிவிருத்தி தொடர்பான திட்டவரைவு தயாராகிய பின்னர் இரு மாகாணங்களையும் இணைத்துப் பேசுவது என்றும் நேற்று முடிவுசெய்யப்பட்டுள்ளது. (அ-ஒ,5,22)

## வடக்கு...

மிருந்து நேற்று இரவு அந்தப் பதவி பறிக்கப்பட்டுள்ளது. இவர் இன்று சுகாதார அமைச்சில் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பிரிவின் பணிப்பாளராகக் கடமையேற்கவுள்ளார்.

வடமாகாண சுகாதாரப் பணிப்பாளராக இருந்த மருத்துவர் ஆறுமுகம் கேதீஸ்வரன் யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளராகக் கடமைகளை பொறுப்பேற்ற நிலையில் கொழும்பிலிருந்து வடமாகாண சுகாதார பணிப்பாளராக திலீப் லியனகே மத்திய சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டார். இவருக்கு நியமனம் வழங்கப்பட்டபோது வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா சிங்கப்பூருக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட நிலையில் ஆளுநரின் அனுமதி பெறப்படாமலேயே குறித்த நியமனம் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் வடமாகாண ஆளுநர் அவரது நியமனத்தை ஏற்காத நிலையில் வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் வசம் இருந்த நிதி அதிகாரங்களுக்கு ஆளுநர் கட்டுப்பாடு விதித்தார். அத்துடன் இந்த நியமனத்தை திரும்பப் பெறுமாறு ஆளுநர் கொழும்பிடம் வலியுறுத்தியுமிருந்தார். இவ்வாறானதொரு பின்னணியிலேயே மருத்துவர் திலீப் லியனகே வசமிருந்த வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் பதவி நேற்றிரவு பறிக்கப்பட்டது. இதனால் தனது பொறுப்புகளை வடமாகாண சுகாதாரப் பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் நந்தகுமாரிடம் ஒப்படைத்துவிட்டு கொழும்புக்கு பயணமானார் மருத்துவர் டிலீப் லியனகே.

இதேவேளை- யாழ்.போதனா மருத்துவமனைப் பணிப்பாளரான மருத்துவர் த.சத்தியமூர்த்தி வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பியதும், வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளராக நியமிக்கப்படுவார் என்றும் கூறப்படுகின்றது. (ம-20)

## ஒளிப்படங்களை...

முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்றிட்டத்தை ஒளிப்படங்கள் எடுத்து அச்சுறுத்தும் விதமாக இராணுவத்தினர் செயற்பட்டுள்ளனர்.

சாவகச்சேரிப் பகுதியில் இந்தக் கஞ்சி வழங்கும் செயற்றிட்டம் நேற்று மாலை முன்னெடுக்கப்பட்டது. இதன்போதே சாவகச்சேரி சந்தைத் தொகுதிக் கட்டடத்தின் மேல் தளத்தில் நின்ற இராணுவத்தினர் முள்ளிவாய்க்கால் கஞ்சிப் பகிர்வு நடவடிக்கையில் ஈடுபட்ட மாணவர்களை ஒளிப்படமெடுத்துள்ளனர். (அ-ம-125)

## ஜனாதிபதியுடன்...

துள்ளதாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் 'உதயன் பத்திரிகைக்கு' அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதியுடன் முதலில் சந்திப்பு நடந்தது. வடக்கு - கிழக்கில் பெரும்பான்மையானவர்கள் தமிழ்பேசும் மக்கள். எந்த விடயம் என்றாலும் வடக்கு - கிழக்கை பிரித்து உங்களின் செயற்றிட்டங்களை முன்னெடுக்க இடமளிக்கமாட்டோம். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் வடக்கு - கிழக்கின் தனியலகு தொடர்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் தீர்வு முயற்சிகளையும் நீங்கள் மேற்கொள்ளவேண்டும். வடக்கு - கிழக்கைப் பிரித்து பேச்சு நடத்த விரும்பினால் நான் உள்ளிட்ட எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் அதில் பங்கேற்கமாட்டோம். எனது கருத்துக்களை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார். வடக்கு - கிழக்கை இணைத்துத்தான் அனைத்துப் பேச்சுக்களையும் முன்னெடுப்போம் என்று பதிலளித்தார். ஜனாதிபதியுடனான பேச்சு முடிவடைந்த பின்னர் இந்தியத் தூதரகத்துக்கு நான், தமிழ் அரசுவின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் சென்றோம்.

ஜனாதிபதியுடனான சந்திப்பில் பேசப்பட்ட விடயங்களை இந்தியத் தூதுவர் கோபால்பாக்லேயிடம் விரிவாக எடுத்துரைத்தோம். வடக்கு - கிழக்கைப் பிரித்து அரசு மேற்கொள்ளும் எந்தவேலைத்திட்டத்தையும் ஆதரிக்கோம் என ஜனாதிபதியிடம் எடுத்துக்கூறியுள்ளோம் என்பதை இந்தியத் தூதுவருக்கு விசேடமாகச் சுட்டிக்காட்டினோம். இந்தியா எமது அயல் நாடு. தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் தீர்வு விடயம் தொடர்பிலும் அன்று தொடக்கம் இன்று வரை இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்துவரும் நாடு. இந்தியாவின் ஆலோசனைகளை நாங்கள் பெறுவோம். எமது பிரச்சினைகளையும் இந்தியாவுக்கு எடுத்துரைப்போம். அந்த வகையில்தான் இந்தியத் தூதுவரை சந்தித்தோம் - என்றார். (அ-ஒ,5,22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிணற்றுக்குள் வீழ்ந்து பெண்குழந்தை பலி!

யாழ்ப்பாணம், மே 10

கிணற்றுக்குள் வீழ்ந்த பெண் குழந்தையொன்று சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்துள்ளது. இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கருணாநிதி ரக்ஸியா (வயது-2) என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குழந்தையின் தாயார் வீட்டு வேலைகளைச் செய்துகொண்டிருந்தபோது, குழந்தை தவறுதலாக கிணற்றுக்குள் வீழ்ந்துள்ளது என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குழந்தை மீட்கப்பட்டு தெல்லிப்பழை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது அந்தக் குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். திடீர் மரண விசாரணை அதிகாரி ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார்.

(அ-ம)


## தேவை

மென்பான விற்பனைப் பிரதிநிதி மற்றும் அனுபவமுள்ள களஞ்சியக்காப்பாளர் தேவை.

077 772 2215

## வேலையாள்கள் தேவை

SKY Light Guest Inn எனும் தங்குமிட விடுதியில் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. சிங்கள மொழி பேசத்தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.

SKY LIGHT GUEST INN
No.1,2nd Lane, Palaly Road, Jaffna.
077 540 0779

## பணியாளர்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல முன்னணி நகைவியாபார நிலையத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை

- **கணக்காளர்:** A/L வர்த்தக துறையில் படித்த வடிவான கையெழுத்துடைய ஆண்/ பெண் இருபாலாரும்
- **கணினி தரவு பதிவாளர்** (Data Entry Operator): O/L, ICT, A/L, Git படித்தவர்கள் (ஆண் / பெண்)
- **விற்பனை உதவியாளர்:** (ஆண் / பெண்)
- **சிட்டை எழுதுனர் :** வடிவான கையெழுத்து உடையவராக (ஆண் / பெண்)

(முன் அனுபவம் இல்லாதவர்களுக்கு வேலை கற்பிக்கப்படும்)

சுயவிபரக்கோவையுடன் முற்பகல் 10.00 மணிமுதல் நேரில் வரவும்

(cr. 39799) (N-1)

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
இல.30,32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A-9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✓ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ✓ திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ✓ ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்

பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.

தொடர்புகளுக்கு: ஜெயம்
077 8147 389
077 9865 457

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✓ A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- ✓ காய்க்கும் தென்னைகள் 24 உள்ளன.
- ✓ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ ஒரு பரப்பின் விலை 19 இலட்சம் முதல் 17 இலட்சம் வரை

பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.

தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு: ஜெயம்
077 8147 389
077 9865 457


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த 21.04.2022 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவி

## சின்னத்தம்பி சிவகாமி

**அவர்களின் முதலாம் ஆண்டு நினைவலைகள்.**

இவ்வுலகிலிருந்து விண்ணுலகம் சென்று
ஓராண்டு ஆகிவிட்டதோ!
உன் பாசமும், நேசமும், எங்களின் நெஞ்சில்
பதிந்து அசையாத ஆணி வேராக ஊன்றியுள்ளதே
என்றும் புன்னகையுடன் - இன்முகம் காட்டி
எல்லா உள்ளங்களிலும் குடி கொண்ட
உங்கள் நினைவுகள்
என்றென்றும் நிலைத்திருக்கும்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (10.05.2023) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையாரை வேண்டி நிற்கின்றோம்.



தோற்றம் 08.06.1937 மறைவு 21.04.2022

கரந்தன் சந்தி,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

குடும்பத்தினர்.

திதி:- தேய்பிறை பஞ்சமி (10.05.2023)

(50349) APL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.